விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

க்கங்கள்: பதினாறு — Valampurii

ங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 19 திங்கட்கிழமை (01.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 44

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் தேர்தலில் போட்டியிட அனுமதியில்லை

### ★ கட்சித் தகவல்கள் தெரிவிப்பு ★

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு இந்தத் தடவை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட ...ய்ப்பளிக்கப்பட மாட்டாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இயல்பாகவே அரசியல் கட்சிகள் கட்சிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதில்லை என சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்ந்தும் கூட்டமைக்கும் வாய்ப்புகள் உள்ளதா எனக் கேட்டதற்கு இன்னும் அதனைப் பற்றி முடிபு செய்யவில்லை (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிபுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.க., ஜே.வி.பி. இணைந்து வழக்குத் தாக்கல் செய்யத் திட்டம்

(கொழும்பு)

ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற்று முடிந்த இலங்கையின் 6-வது ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியன நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற விதம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு சமூகங்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இரு கட்சிகளும் அறிவித்துள்ளன.

இதேவேளை மகிந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளவுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

# காலக்கெடு நிறைவடைந்த போதிலும் மீள்குடியேற்றம் இன்னமும் இல்லை!

## இடம்பெயர்ந்த மக்கள் கவலை

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்த்தப்படுவர் என அரசு கூறியபோதும் ...ற்றுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் மீள்குடியேற்றம் இடம்பெறும்

### அமைச்சர் றிசாத் நம்பிக்கை



(வவுனியா)

மிதிவெடி அகற்றும் பணி நிறைவடைந்ததும் மீள்குடியேற்றம் இடம்பெறும் என மீள் குடியேற்ற அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; ஜனவரி 31 ற்குள் அகதி முகாம்கள் மூடப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட வேண்டும். அந்த அடிப்படையிலேயே நாங்கள் எங்களுடைய (16 ஆம் பக்கம் பார்க்க)

## ...ரு தசாப்தங்களின் பின்னர் ...-32 நெடுஞ்சாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

...த்தளத்தில் இருந்து மன்னார் பகுதியை ...க்கும் ஏ-32 நெடுஞ்சாலை 22 வரு...ன் பின்னர் மக்களின் பாவனைக்கு ...பட்டுள்ளது.

... தொடர்பில் மேலும் தெரியவருவதா...

...நாட்டுப்போர் காரணமாக 1988 ஆம் ... மூடப்பட்ட ஏ-32 நெடுஞ்சாலை தற்... பொதுமக்களின் பயன்பாட்டுக்கு ...விடப்பட்டுள்ளது.

...னார் பகுதியையும் புத்தளம் பகுதி... இணைக்கும் இந்த நெடுஞ்சாலை ...நாயிற்றுக்கிழமை திறக்கப்பட்ட பின்...ல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 9 ஆம் திகதி பொதுத் தேர்தல்! வரும் வெள்ளி நாடாளுமன்றக் கலைப்பு?

### மக்களுக்கு இடையூறின்றி நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 9-ம் திகதி பொதுத்தேர்தல் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திர தினத்திற்கு மறுநாள் நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் பொதுத் தேர்தல் பணிகளுக்காக 180 கோடி ரூபா செலவிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்களத் தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

புத்தாண்டு காலத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அதன் மூலம் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் இதனால் மக்களுக்கு இடையூறு அற்ற வகையில் தேர்தல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத்தேர்தல் பணிகளுக்காக 180 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ...மெரிக்கத் தூதுவருடன் ...மைச்சர் றோகித பேச்சு



(கொழும்பு)

அமெரிக்காவின் இலங்கைத் தூதுவர் பற்றீசியாவும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பு வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னரான நாட்டின் நிலைவரம் குறித்தான (16 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு யாழ்ப்பாணத்தில் அங்குராா்ப்பணம்

### தலைவராக தவரட்ணம் நியமனம்

யாழ்.குடாநாட்டில் தங்களது எதிர்காலத்தையும் வாழ்வாதாரங்களையும் உறுதிப்படுத்தும் வகையில் சமூக ஆர்வலர்களால் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் தலைமைகள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களே தம் மீது திணிக்கப்பட்டதாகவும் அப்படியான செயற்பாடுகள்தான் தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு காரணம் என்று இந்த அழுத்தக் குழுவினர் கூறுகிறார்கள்.

இந்தக் குழுவில் எதிர்வரும் காலத்தில் முஸ்லிம் மக்களையும் இணைத்துக் கொள்ள இவர்கள் தீர்மானித்துள்ளனர். இதன் மூலம் வட.கிழக்கு பகுதியில் சிறுபான்மையினர் தொடர்பான (16 ஆம் பக்கம் பார்க்க)

# கணனித் தொழில்நுட்ப முறைகேட்டால் வெற்றிபெற்ற ஜனாதிபதித் தேர்தல்

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் 1.5மில்லியன் வாக்குகள் இறுதியில் மென்பொருள் தொழில்நுட்பத்தினால் முறைகேடாக மாற்றப்பட்டதன் மூலமே மஹிந்த ராஜபக்ஷவுக்கு 1.8மில்லியன் வாக்குகள் மேலதிகமாக கிடைத்து அவர் வெற்றிபெற்றதாக சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளரான மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட மென்பொருள் தொழில்நுட்ப வாக்கு மோசடி இதுவென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மக்கள் விரைவில் இந்த தேர்தல், மோசடிமிக்க தேர்தல் என்பதை உணர்ந்து கொள்வார்கள் எனக்குறிப்பிட்டுள்ளார்.

தமது குற்றச்சாட்டுக்கு அடிப்படையாக மகிந்த ராஜபக்ஷ அரச சொத்துக்களை தமது பிரசாரத்திற்காக பயன்படுத்தியமை உட்பட பல்வேறு விடயங்களை குறிப்பிட்டுள்ள மங்கள சமரவீர, தேர்தல்கள் ஆணையாளர் இறுதியாக வெளியிட்ட அறிக்கையை உற்று நோக்கினால் இந்த உண்மை புரியும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

பல சந்தர்ப்பங்களில் நாங்கள் வாக்குப் பெட்டிகளை காப்பாற்ற முடியாமல் இருந்தோம். இது மிகவும் பிழையான வழிமுறையாகும். இந்த நிலையில் நான் மிகவும் கஷ்டமான முறையிலேயே பணியாற்ற முடிந்தது என தேர்தல்கள் ஆணையாளர் கூறியிருந்தார்.

ஜனாதிபதி தேர்தலை இரத்துச் செய்ய நீதிமன்றம் சென்றால் ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவுக்கு அரச ஊடகங்கள் மேற்கொண்ட பிரசாரங்களும் நிகழ்ச்சிகளும் மாத்திரமே போதும். துரதிர்ஷ்டவசமாக பதவியில் உள்ள பிரதம நீதியரசரே அரசியலமைப்பை மீறி பதவிக்கு நியமிக்கப்பட்டவர்.

கணனி தொழில்நுட்பத்துடன் கூடிய வாக்கு மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதை எம்மால் தற்போதைக்கு நிரூபிக்க முடியாதுள்ளது. வடக்கில் குண்டு வெடிப்புகள் இடம் பெற்றும், தெற்கில் பல்வேறு இடங்களில் தேர்தல் தினத்தன்று வன்முறைகள் இடம் பெற்றும் கூட சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இந்த தேர்தலை நியாயமான தேர்தல் எனக்குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் அரசாங்கத்தினால் நன்றாக உபசரிக்கப்பட்டவர்கள் என்பதும் குழுவில் இடம்பெற்றிருந்த சிலர் இது தமக்கு கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை என்றும் தெரிவித்திருந்தமை அவர்களின் நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி மாவட்ட செயலாளர்கள், வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு சென்று சேரும் வகையில் கணக்கெடுப்பின் போது நடந்துகொண்டனர்.

இவர்கள் அனைவரும் ஜனாதிபதியின் சகோதரரால் தெரிவுசெய்யப்பட்டு இந்த நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டார்கள் என்ற தகவலும் எமக்கு கிடைத்துள்ளது. இதனை தவிர கொழும்பு உட்பட பல்வேறு இடங்களில் ஆயுதம் தாங்கியவர்கள் தேர்தல் வாக்களிப் பின் போது வாக்குமோசடிகளிலும் ஈடுபட்டனர்.

இதனைதவிர சரத் பொன்சேகாவின் அன்னம் சின்னத்துக்குரிய வாக்குகள் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிலை சின்ன வாக்குகளுடன் எண்ணப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. என்றும் இல்லாதவாறு இந்த தடவை தேர்தல்கள் ஆணையாளரின் கையொப்பமில்லாமல் வாக்கு எண்ணிக்கைகள் ஊடகங்களுக்கு தொழில்நுட்பம் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் ஏன் வாக்கு எண்ணிக்கைகள் வாக்கு எண்ணும் நிலையங்களில் வெளியிடப்பட்டதன் பின்னரும் கூட அதிக நேரம் கழித்து ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டன? ஏன் பசில் ராஜபக்ஷ தேர்தல்கள் ஆணையாளருடன் அதிக நேரங்களை செலவிட்டார்?

இந்த நிலையில் தேர்தல் மோசடிகளை வெகுவிரைவில் எதிர்க்கட்சிகள் மக்களுக்கு தெரியப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அரசியலில் ஈடுபடக் கூடிய அனைத்து தகுதிகளையும் சரத் பொன்சேகா கொண்டிருப்பதால் அவர் பல இலட்சம் மக்களுக்காக பொதுத்தேர்தலிலும் போட்டியிடுவார் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ச–5)

# வடக்குக் கிழக்கிலுள்ள குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கோரியுள்ளது.

இது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் இரா.சங்கையா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று நிறைவடைந்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியினைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் அதிகளவு வாக்கு கிடைக்கவில்லை. அவை எதிரணிக்கே கிடைத்துள்ளது.

இந்நிலையில் வடக்கு கிழக்கு மக்கள் தமக்கு கூடுதலான வாக்குகளை அளிக்காமை தொடர்பாக ஜனாதிபதி, ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் எந்த வேட்பாளருக்கு கூடுதலாக வாக்களித்தார்கள் என்பது பிரச்சினையல்ல; சுமார் முப்பது வருடகால உள்நாட்டுப் போரின் முடிபிற்குப் பின்னர் தோன்றியிருக்கும் சூழ்நிலையில் ஜனநாயக செயன்முறைகளில் பங்கேற்பதில் அவர்கள் ஆர்வம் காட்டியிருக்கின்றமை தமக்கு பெரும் உற்சாகத்தைத் தருவதாக அமைத்திருக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இக்கருத்துக்கள் தேர்தலுக்குப்பின் தமிழ் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள அச்சங்களை களைவதாக அமைந்துள்ளதாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகின்றது.

உண்மையில் வடக்கு கிழக்கில் மகிந்த ராஜபுக்ஷவுக்கு தமிழ் மக்கள் கூடுதலான வாக்குகளை அளிக்காமைக்கான காரணங்களில் ஒன்று, அப்பிரதேசங்களில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள்தான் என்பதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருப்பினும் ஆயுதக் கலாசாரம் தமிழ் பிரதேசங்களில் இன்னமும் தொடர்கின்ற நிலைதான் உள்ளது.

ஆயுதக் குழுக்களை தம்முடன் வைத்துக் கொண்டு அரசியல் நடத்தும் அமைப்புகளினால் மக்கள் சுதந்திரமாக தங்கள் கருத்துக்கள்ளை வெளியிட முடியாத நிலையில் பெரும் அச்சத்துடனேயே வாழவேண்டிய நிலை தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது.

இந்நிலையில் ஆயுதக் கலாசாரத்தை தமிழ் மக்கள் தற்போது முற்று முழுதாக வெறுக்கின்றனர். இத்தேர்தல் வாக்களிப்பில் வடபகுதி மக்கள் குறைந்த அளவில் கலந்து கொண்டமைக்கு, யாழ்.குடாநாட்டில் நடைபெற்ற குண்டு வெடிப்புகளும், ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்களும் முக்கிய காரணமாகும்.

அடுத்து வரும் காலங்களில் பொதுத் தேர்தல், வடமாகாணசபைக்கான தேர்தல் என்பன நடைபெறவிருக்கின்ற நிலையில் இப்பிரதேசங்களிலுள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் முற்று முழுதாக களையப்பட வேண்டும்.

அவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே மக்கள் சுதந்திரமாக தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாக்களிப்புகளில் கலந்து கொள்ள முடியும்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் செயன்முறைகளில் ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசாங்கமும் ஈடுபட வேண்டும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்பார்க்கின்றது என்றுள்ளது. (ச)

## மருத்துவபீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மலாபேயில் அமைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கடந்த இரு வாரங்களாகத் தொடர்ந்த எமது விரிவுரைகளின் பகிஷ்கரிப்பை இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமது இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பை வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் இனிவருங்காலங்களிலும் ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம் என அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மாதாந்த கருத்தரங்கும் நினைவஞ்சலி நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இந்துமத குருமார் ஒன்றியத்தின் மாதாந்த கருத்தரங்கு நிகழ்வும், அமரர் விப்ரசிரேஷ்ட அந்தணப் பெருமக்கள் நவாலி சிவஸ்ரீ.சாமி விஸ்வநாதக்குருக்கள் மற்றும் மாவை ஆதீனம் சிவஸ்ரீ து.சுந்தரமூர்த்திக் குருக்கள் ஆகியோரது நினைவுப் படத்திரை நீக்கமும், அஞ்சலி நிகழ்வும்,

இன்று திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக தலைவர் ப.மனோகர குருக்கள் அறிவித்துள்ளார். (ச)

# இராணுவத்துக்கான பயிற்சிகளை ஐரோ.ஒன்றியம் நிறுத்தியுள்ளது

## இராணுவப் பேச்சாளர் கவலை

ஜெனரல் சரத் பொன்சேகா மேற் கொண்ட குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து இலங்கை இராணுவத்திற்கான பயிற்சி நடவடிக்கைகளை வெளிநாடுகள் நிறுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகளுக்கான அழைப்புக்கள் இலங்கை இராணுவத்திற்கு அனுப்பப்படவில்லை. குறிப்பாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கொண்ட குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கான கொமாண்டோ மற்றும் சிறப்புப் படைப் பயிற்சிகளை பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வழங்குவதுண்டு. ஆனால் அவர்கள் தற்போது அதனை நிறுத்தியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற இறுதிக்கட்ட சமரில் வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவுகளுக்கு அமைவாக மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா தலைமையிலான 58ஆவது படையணியினர் படுகொலை செய்ததாக பொன்சேகா கடந்த மாதம் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச–5)


## ஆடை தைப்பவர்கள் தேவை

பெண்களிற்கான ஆடைகள் வெட்டித் தைப்பதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**கணேசன் சென்ரர்**
புடவை அழகு சாதனப் பொருள் விற்பனையாளர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
T.P:- 021 222 5708
(C-4367)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் மிருகமும்

ஒரு பெரிய காடு.

அங்கே ஒரு சிங்கம் இருந்தது.

ஒருநாள் காலை நேரம். அதற்கு பசியெடுக்க ஆரம்பித்தது. உடனே குகையை விட்டு வெளியேவந்தது. ஏதாவது இரை கிடைக்குமா என்று அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தது.

அங்கே ஓர் அழகான மான். அப்பொழுதுதான் ஆற்றில் குளிர்த்துவிட்டு வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு நல்ல கொழுகொழுவென்று இருந்தது.

"ஆகா... அருமையான சந்தர்ப்பம். அதை அடித்து சாப்பிட்டுவிடலாம் என்று நினைத்து சிங்கம் மெதுவாக அந்தப் பக்கமாகச் சென்றது. அந்தச் சமயம் பார்த்து நரியொன்று அந்தப் பக்கமாக வந்தது. அதற்கும் அந்த மானைச் சாப்பிட வேண்டும்" என்று ஆசை.

ஆனால் சிங்கம் அதைச் சாப்பிட்டுவிட்டால் அதற்கு எங்கே கிடைக்கப்போகிறது.

நரி தந்திரமாக யோசித்தது.

மெதுவாக அந்தச் சிங்கத்திடம் போய்

"சிங்கராஜா! ஒரு விடயம்! சொன்னா நீங்க தப்பா நினைக்கக்கூடாது" என்றது.

"என்ன சொல்கிறாய்?"

"அது வந்து... ஒன்றுமில்லை... குளித்துவிட்டு வரும் மானை அடித்துச் சாப்பிட்டால் பதவிக்கு ஆபத்து என்று சாஸ்திரம் சொல்கிறது" என்றது.

"அப்படியா?"

சிங்கம் பயப்பட ஆரம்பித்தது.

"நல்லவேளை! சரியான நேரத்தில் வந்து என்னிடம் சொன்னாய்! வா என்னுடன்... இரண்டு பேரும் பேசிக்கொண்டே போகலாம்" என்றது.

நரிக்கு மறுபடியும் சிக்கல்.

மெதுவாக இந்த சிங்கம் வேறு இரை தேடிப் போய்விடும். நாம் இந்த மானைப் பிடித்துக் கொள்ளலாம் என்பது நரியின் திட்டம்.

இதற்கிடையில் மானும் தப்பித்துப் போய்விட்டது.

இரண்டு பேரும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். நரிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

உடனடியாக எதையாவது சாப்பிட்டாக வேண்டும்.

என்ன செய்வது?

மறுபடியும் ஒரு யோசனை கூறியது.

"சிங்கராஜா! குளித்துவிட்டு வரும் மானை கொன்றால் பதவிக்கு ஆபத்தென்பது உண்மைதான். ஆனால் அதற்கும் ஒரு பரிகாரம் உண்டு. அதுவும் சாஸ்திரத்தில் இருக்கிறது" என்றது.

"என்ன பரிகாரம்?"

"நீங்கள் நடந்துபோகும் எதிரில் வரும் முதல் ஐந்து மிருகங்களைக் கொன்றுவிட வேண்டும்."

ஆனால் சாப்பிடக்கூடாது. நாள் முழுக்க விரதமிருக்க வேண்டும்.

இவையிரண்டும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது பக்கத்தில் புதரில் மறைந்திருந்த ஒரு முயலின் காதில் விழுந்தது.

ஆபத்தென்று உணர்ந்த முயல் உடனே ஓடிப்போய் எல்லா மிருகங்களிடமும் இந்தத் தகவலைக் கூறியது.

எல்லா மிருகங்களும் முன்னெச்சரிக்கையுடன் அவை இருக்கும் இடத்தைவிட்டு வெளியே வரவேயில்லை. சிங்கமும் நரியும் அலைந்து திரிந்தன. சாப்பிடுவதற்கு ஒரு மிருகம்கூட கிடைக்கவில்லை. அந்தக் காட்டில் ஒரு பெரிய பானை இருந்தது. அதனிடம் ஓடிப்போய் முயல் நிலைமையைச் சொல்லியது.

எல்லாம் இந்த நரி பண்ணும் வேலைதான் என்பதைப் புரிந்து கொண்டது.

இரு... இரு உனக்கு ஒரு வழி பண்ணுகிறேன் என்று மனதுக்குள் கறுவிக் கொண்டே அந்தச் சிங்கத்திடம் சென்றது.

சிங்கத்தைத் தனியாக அழைத்தது.

"ஒரு நரியைக் கொண்டால் ஐந்து மிருகங்களைக் கொல்வதற்குச் சமம்" என்றது.

"நல்ல நேரத்தில் நல்ல யோசனை சொன்னீர்கள்" என்று கூறிய சிங்கம் நரியின் பக்கம் திரும்ப ஆரம்பித்ததாம்.

அதன் பின் அங்கு என்ன நடந்திருக்கும் என்றுசொல்ல வேண்டியதில்லை.

இது குழந்தைகளுக்காகச் சொல்லப்படும் கதை.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்று நீதி விளக்கமும் கொடுப்பார்கள்.

இன்றைக்கு மனிதர்களிலும் இதுபோல் சிங்கம், நரி, யானை, முயல், எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

காட்டில் ஒரு புலி வந்தால் இது புலி என்று தெரியும்.

ஒரு நரி வந்தால் பார்த்தவுடனே இது நரி என்று தெரியும். ஒரு கரடி வந்தால் அதன் தோற்றத்தைப் பார்த்தே வருவது கரடி என்று நாம் தெரிந்து கொள்ளலாம். உடனே நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஆனால் நாட்டுக்குள் வந்துவிட்டால் எதிரே வருவதில் எது புலி, எது நரி, எது கரடி என்று புரிந்து கொள்ள முடியாது.

ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வதை பிள்ளை கவனித்துக் கொண்டிருந்தான்.

அப்பா சத்தம் போடுகிறார்.

"எவ்வளவு நேரமாக இங்கே உட்கார்ந்து கொண்டு கரடிபோல் கத்திக் கொண்டிருக்கிறேன். உனக்கு கொஞ்சமாவது புரிகிறதா?"

உள்ளேயிருந்து அம்மா:

"எனக்குக் கரடியின் பாஷையெல்லாம் புரியாதுங்க!".

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

அழகியற்கலைப் பட்டதாரிகளை

# ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

## கல்வியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அழகியற்கலைப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகும் எனக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக இவர்களை சேவையில் இணைத்துக் கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்த நியமனத்துக்குப் போட்டிப் பரீட்சை நடத்துவதா அல்லது கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் வெற்றிடங்களை கவனத்திற்கொண்டு தீர்மானிக்க வேண்டுமா என்பது குறித்து முடிவெடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

தற்பொழுது நிலவும் வெற்றிடங்களுக்கமைய குறைவான எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமாயின் போட்டிப் பரீட்சை நடத்த வேண்டிய தேவையில்லை.

எவ்வாறாயினும் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். வெற்றிடங்களின் எண்ணிக்கைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பிப்போரின் எண்ணிக்கைகள் அதிகமாக காணப்படின் போட்டிப் பரீட்சை நடத்தப்படும்.

மூவாயிரம் அழகியற்கலைப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# சயரோகத்தால் வருடாந்தம் 400 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

சயரோகம் காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 400 பேர் உயிரிழக்கின்றமை தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடாந்தம் 11 ஆயிரம் பேர் வரை சயரோகத்திற்கு ஆளாவதாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் சயரோக ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சுனில் அல்விஸ் தெரிவித்தார்.

உலகில் மூன்றில் ஒரு பங்கினர் சயரோகத்தால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சயரோகத்திற்கு முறையான சிகிச்சை முறை காணப்படுவதால் நோய் அறிகுறி தென்பட்டவுடனேயே வைத்தியரை நாடி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இதனைச் சுகப்படுத்திக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## இராசி பலன்

01-02-2010
(தை 19, திங்கட்கிழமை)
துதியை முற்பகல் 8.14 மணிவரை
திருதியை பின்னிரவு 6.03 மணிவரை
மகம் முற்பகல் 10.19 மணிவரை
இராகுகாலம் 8.06-9.39 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அஜீரணக்கோளாறு, குடும்பக் கவலை, வேலைச்சுமை, காரிய தாமதம். |
| இடபம் | மனச்சஞ்சலம், புதிய தகவல், கல்வியில் ஆர்வம், வாகன சுகம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, மனோதைரியம் பிரயாண நம்மை, தன தானியசேர்க்கை. |
| கடகம் | போசனசுகக்குறைவு, விவாதம், அதிக செலவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | நல்ல வரவேற்பு, வெகுமானம், நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை. |
| கன்னி | பிறருக்கு உதவுதல், ஆரோக்கியக் குறைவு, காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு. |
| துலாம் | ஆனந்தம், எடுத்தகாரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு, சயன சுகம். |
| விருச்சிகம் | பிறர் உதவி, செய் தொழில் முன்னேற்றம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தூரதேசச் செய்தி. |
| தனுசு | தொழில் மந்தநிலை, இடமாற்றம், ஆரோக்கியக் குறைவு, புதிய முயற்சி. |
| மகரம் | உஷ்ண வியாதி, எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| கும்பம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, சௌபாக்கியம், விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |

வளவன்

அரச சேவைக்கான

# ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையை மார்ச் மாதத்தில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையை எதிர்வரும் மார்ச் மாதத்தில் மீண்டும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.


ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் ஆட்சேர்ப்புக்களை தடுக்கும் வகையில் தேர்தல்கள் ஆணையாளர் விடுத்த உத்தரவுக்கமைய இந்த மாதம் நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் டி. திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இதற்கமைய நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை ஆகியன ஒத்திவைக்கப்பட்டன.

விண்ணப்பதாரிகளுக்கு அநீதி ஏற்படாத வகையில் மீண்டும் பரீட்சை நடைபெறவுள்ளதாக டி. திஸாநாயக்க கூறினார். எனினும் பொதுத் தேர்தல் நடைபெறுவது குறித்து அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய இந்த நிலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 50 | 50 | 50 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 150 |
| தக்காளி | 110 | 130 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 35 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 120 | 130 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 80 | -- | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 110 | 80 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 170 | 150 |
| லீக்ஸ் | 140 | 150 | 80 |
| பீற்றூட் | 90 | 100 | 130 |
| கறிமிளகாய் | 160 | 170 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 130 | 90 |
| கத்தரி தம்புள்ள | 60 | 70 | 90 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |



கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் பிரான்சில் வசிக்கும் எழுத்தாளர் கைதடி என்.ஜே.துரைசிங்கத்தின் பொன்விழா அகவையை முன்னிட்டு வெளியிடப்பட்ட துரை -50 சிந்தனைச் சிற்பி நூல் வெளியீட்டு விழாவில் இலக்கிய வட்டத் தலைவர் சி.நிசாகரன் , பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர் எஸ்.மகாலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும், லயன் ப.செல்லத்துரை வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், நூலின் சிறப்புப் பிரதியை எஸ்.மகாலிங்கத்திடமிருந்து எஸ்.கந்தசாமி பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 2 மணிக்கு பிக்னல் மைதானத்தில் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உத்விப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பழைய மாணவர்களுக்கிடையேயான சாம்பிலுவை போர், மாணவ மாணவியருக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வினை கண்டுகளிக்க கல்லூரி சமூகத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் பி.எல். மோகன் கேட்டுள்ளார். (6-27)

## கொரிய நாட்டு பொறியியலாளர் குழு யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு கொரிய நாட்டிலிருந்து ஒரு தொகுதி பொறியியலாளர் குழு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை வருகை தரவுள்ளதாக தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந. யோகராஜன் தெரிவித்துள்ளார்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு கொரியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட 11 கொள்கலன்களிலுள்ள நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளினை பொருத்துவதற்காக இக் குழுவினர் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்மூலம் வடபகுதி மற்றும் தென்னிலங்கை இளைஞர், யுவதிகள் இக் கல்லூரியில் உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் மாணவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாக அமையும் என்று அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ் உபகரணங்கள் பொருத்தும் பணிகள் பூர்த்தியடைந்ததும் தரமுயர்த்தப்பட்ட இக் கல்லூரியினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்க வுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (30-2)

## நேரக்கணிப்பாளர் இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேரக் கணிப்பாளர் இன்மையால் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பு கடமையாற்றிய நேரக்கணிப்பாளர் ஓய்வுபெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூடிய விரைவில் நேரக்கணிப்பாளரை நியமனம் செய்து பிரயாணிகளிற்கு உதவ வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-29)

## — வாள் வெட்டுக்கிலக்காகி — மூன்று இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வாள் வெட்டுக்கிலக்காகிய மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு கோண்டாவிலில் இடம்பெற்ற சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்தவர்களான பு.தர்ஷன் (வயது 21), ந.நிசாந் (வயது 23) , ர.சிறிசிவதாஸ் (வயது 22) என்ற இளைஞர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக குறித்த இளைஞர்கள் நேற்றிரவு ஆலயம் ஒன்றில் நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றினைப்பார்ப்பதற்கு சென்று கொண்டிருந்த வேளை இனந் தெரியாதோர் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தலையில் படுகாயமடைந்த மூன்று இளைஞர்களும் கோப்பாய் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (30-2)




## திடீர் மரண விசாரணை அதிகாரியை நியமிக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாது தென்மராட்சிப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதுபற்றி பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்ற போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரிவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சடலங்களை பிரதேச பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் பெரும் சிரமத்தின் மத்தியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் இதனால் பெரும் பணச் செலவும் அலைச்சலும் ஏற்படுத்துவதாகவும் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (6-29)

## கும்பாபிஷேக தின தீப ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் இராஜகோபுர கும்பாபிஷேக தின தீப ஒளிவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 10.30 மணிக்கு 108 சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும் பிற்பகல் 4மணிக்கு பூஜையும் 4.30 மணிக்கு சங்கற்பம் தீப மஹாலஷ்மி பூஜை, சுமங்கலி சுபாஜினி பிரார்த்தனை ஒளிவிழா என்பனவும் இடம் பெறவுள்ளது. (6)

## தென்மராட்சிப் பகுதியில் டெங்கு நோயாளர் அதிகரிப்பு


(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் டெங்குநோய் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய சாவகச்சேரி வைத்தியசாலையில் தினமும் நோயாளிகள் டெங்கு நோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வண்ணமுள்ளனர்.

எனினும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் தற்போது இல்லாமையால் டெங்கு நோயாளிகள் தினமும் யாழ். பொதுவைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய சாவகச்சேரியிலிருந்து தினமும் குறைந்தது மூன்று நோயாளிகள் வீதம் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2)



இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழாவில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் மஞ்சத்தில் திருவீதியுலா வருவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-குமரன்)

## யாழ். நகரப் பகுதியில் கால்நடைகள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகையான கால்நடைகளின் நடமாட்டத்தால் நகரில் போக்குவரத்துக்களுக்கு இடையூறு ஏற்படுவதோடு தற்காலிகக் கடைகளுக்குள் இவை உள்நுழைவதாகவும் பழக் கடைகள் என்பவற்றுக்கு சேதம் விளைவிப்பதாகவும் அப்பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (6)

## வன்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் நடத்தப்படும் விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த வன்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (6)




# இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு

டிக்ஸித்தை போன்ற இந்திய உயர்ஸ்தானிகளால் இங்கு எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. இதுகவலைக்குரிய விடயம் இதற்கெதிராக நாம் ஒருமித்து குரலெழுப்ப வேண்டும். விமர்சிக்க வேண்டும். இதனைத் தடுக்கவேண்டும். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான உடனேயே இந்திய உயர்ஸ்தானிகரை சந்திக்கச் சென்றார். பதவியேற்றவுடன் உயர்ஸ்தானிகரொருவரின் இல்லத்துக்குச் சென்ற முதலாவது இலங்கை ஜனாதிபதிதான் மஹிந்த ராஜபக்ஷ. அரச தலைவரொருவர் வெளிநாட்டுத் தூதுவர்களை சந்திக்கச் செல்வதில்லை. தூதுவர் தான் ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்ல வேண்டும்.



தூதுவரொருவரின் நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்குச் சென்று தூதுவரால் கையளிக்கப்பட வேண் டும். இது தான் சம்பிரதாயம் . ஜனாதிபதியோ,பதவிப் பிரமாணம் செய்தவுடன் இந்தியத் தூதுவரைச் சந்தித்து ஆசி பெறச் செல்கிறார்.

இந் நாட்டின் அரசியல் வரலாற்றில் சேர்ஜோன் கொத்தலாவலை செய்யாததை டி.எஸ்.சேனாநாயக்க, S.W.R.D. பண்டார நாயக்க செய்யாததை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்தார். அவர் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்துவிட்டு வந்த பின்னர் நாம் அவரைச் சந்தித்து, "ஏன் இப்படிச் செய்தீர்கள்? நீங்கள் ஏன் இந்திய உயர்ஸ்தானி கரைச் சந்திக்கச் சென்றீர்கள்? அவரல்லவா உங்களை வந்து சந்தித்திருக்கவேண்டும். இந்தநாட்டை இழிவுபடுத்தும் செயலல்லவா இது'' எனக் கூறினோம். அதற்கவர் '' தெரியாதா, எனக்கு அந்த சிந்தனை வரவில்லை'' யெனக் கூறினார். தான் சிந்திக்கத் தவறி விட்டதாகக் கூறமுடியாது. இழந்த கௌரவத்தை திரும்பப் பெறமுடியாது. அதனால் தான் இவ்வாறான அதிகாரிகள் வந்து தமது எண்ணப்படி நடந்துகொள்கின்றனர். இந்த அதிகாரிகள் வந்து என்ன செய்தார்கள்? எவ்வாறான ஒப்பந்தங்களை மேற்கொண்டார்கள்? அவர்கள் ஒப்பந்தம் செய்தது எண்ணெய் வள ஒப்பந்தங்கள் என்பது எமக்குத் தெரியும். அது திருட்டு ஒப்பந்தம். இவ்வாறான பல திருட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அதிகாரிகள் இங்கு வந்து என்ன கூறுகிறார்கள். இந்த நாட்டில் பயங்கரவாதிகளுடனான யுத்தமொன்று இருக்கிறது. இதற்கான ஆயுதங்களை இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலிருந்தும் கொள்வனவு செய்யக்கூடாதென இந்த அதிகாரிகள் மூலமாக எமக்குக் கூறப்படுகிறது. இலங்கையை இந்தியாவின் ஒரு மாநிலமாகவே எண்ணி அவர்கள் செயல்படுகின்றனர். இலங்கையின் தன்னாதிக்கத்துக்கும் இறைமைக்கும், கௌரவத்துக்கும் சவால் விடுக்கும் கூற்றுக்கள் தான் இவை. அரசாங்கமோ, ஜனாதிபதியோ இவற்றுக்குச் சரியான பதிலளிப்பதில்லை. எமக்குத் தேவையான ஆயுதங்களை நாம் விரும்பிய நாட்டிலிருந்தே வாங்குவோமென துணிந்து கூறுவதில்லை. ''இலங்கைக்கு உதவி செய்ய எப்போதும் நாம் தயாராக இருக்கும்போது ஏன் வெளியாரிடமிருந்து ஆயுதக் கொள்வனவு செய்ய வேண்டுமென'' இந்தியா கேட்கிறது.

When we are ready to help, why lanka should go to others அதே வாயால் மீண்டும் "இலங்கைக்கு யுத்தத்துக்கான ஆயுதங்களைத் தரமாட்டோம். பாதுகாப்புக்கு மாத்திரமே ஆயுதங்களைத் தருவோம் எனக் கூறுகின்றனர். அதாவது கவசத்தை மாத்திரம் தருவோம். வாளைத் தரமாட்டோம் எனக் கூறுகின்றனர். கவசத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு யுத்தத்தை வெல்ல முடியுமா? கவசத்தை வைத்துக் கொண்டு பின்வாங்கத் தான் முடியுமே தவிர யுத்தம் செய்ய முடியாது. கவசம் உடைந்து விட்டால் அதோ கதி தான். நாம் அவர்களுக்கு தற்காப்பு ஆயுதங்களைத் தவிர தாக்குதலுக்கான ஆயுதங்களை வழங்கமாட்டோமென, தமிழ் நாட்டுக்கும் கேட்கும் விதத்தில் கூறுகின்றனர். தமிழ்நாடு கூட தாக்குதலுக்கான ஆயுதங்களை வழங்க இடமளிப்பதில்லை.ஏன் இவர்கள் பாதுகாப்புக்காக மாத்திரம் ஆயுதம் வழங்குகின்றனர்? அப்போது தான் புலி பயங்கரவாத இராணுவத்தையும், எமது இராணுவத்தையும் சமபலத்தில் வைத்திருக்க முடியும். அதன் மூலம் தான் இலங்கையின் மீது பலவந்தத்தை திணிக்கமுடியும்.

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் சோமவன்ச அமரசிங்க மற்றும் டில்வின் சில்வா ஆகியோரால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

நோர்வே தலையிட்டது. இப்போது இந்தியா தலையிடுகிறது. கிடைத்த பலன் எதுவுமில்லை. புலிகளுக்கும் வெற்றியில் லை எமது இராணுவத்துக்கும் வெற்றியில்லை. இரு சாராரும் எப்போதுமே மோதிக் கொள்கின்றனர். நாம் எப்போதும் மோதிக்கொள்கிறோம். அவர்களுடைய காரியத்தை அவர்கள் கச்சிதமாக முடிக்கின்றனர். இது தான் அவர்களுடைய கொள்கை. இதனை நாம் உணர வேண்டும். தவறின் நாம் நாட்டைக் காட்டிக்கொடுத் தவர்களாவோம்.

அதன் பின்னர் நாராயணன் என்ன சொல்கிறார் "Sri Lanka may win the battle but not the war " அதாவது இலங்கையில் மோதலில் வெற்றிகொள்ள முடியும். ஆனால் யுத்தத்தில் வெற்றி கொள்ள முடியாது . எமது நட்பு நாடொன்றால் இவ்வாறு கூற முடியுமா? பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் நிச்சயமாக இலங்கை வெற்றி பெறும் என்றல்லவா கூறவேண்டும். இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடியுமென்று எமது இராணுவம் மாத்திரமே கூறியது.

பயங்கரவாதிகள் மட்டுமல்ல, பயங்கரவாதிகளைத் தூண்டிவிட்ட மகா பயங்கரவாதிகளும் அவர்களுக்கு பின்புலத்தில் இருக்கின்றனர். நாம் இந்தியாவைப் பற்றி கதைக்கும் போது சிலருக்கு அது ஜீரணிப்பதில்லை. அவர்கள் நட்பு பாராட்டு கின்றனர். குறிப்பாக எம்மிலிருந்து பிரிந்து சென்றவர்கள். இப்போது இந்தியாவின் நிலைமை என்ன? இந்தியா ஒருபோதும் அமெரிக்க எதிரியாக இருந்ததில்லை. சோவியத் யூனியனோடு நட்பு வைத்துக் கொண்டது கூட பாதுகாப்புக்காத்தான் . அவ்வளவும் குள்ளநரித்தனம்.


அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த உலகத்தை ஆட்டிப்படைக்கும் சக்திகளாக தம்மைக் காட்டிக்கொள்கின்றன. உலகின் நாசகார யுத்தங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் இவர்களே. இன்று நிதி நெருக்கடியில் உலகம் சிக்கித் தவிக்கிறதென்றால் அதற்கும் பொறுப்பாளிகள் இவர்கள் தான். இந்த அண்ணன் தம்பிகள் தான் உலகை அழிக்கப் படாதபாடுபடுகின்றனர்.இப்போது என்ன நடந்திருக் கிறது. இந்தியா அமெரிக்காவோடு கைகோர்த்துக் கொண்டு செயல்படுகிறது. அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல் ஆகிய முக்கூட்டும் ஒரே ஒப்பந்தத்தின் கீழ் செயல்படுகின்றன. எனவே தனது ஆதிக்கத்தை விரிவாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் மாத்திரம் தனது ஆதிக்கத்தை பரவலாக்க இந்தியாவால் முடியும். அதற்காக அணுசக்தி இந்தியாவுக்குத் தேவைப்படுகிறது. ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. அணுகுண்டுகள் தேவை.

இந்திய மக்களில் பெரும்பாலானோர் வறுமையால் படாதபாடுபடுகின்றனர். இலங்கை மக்களை விட கஷ்டப்படும் மக்களை நான் கண்டுள்ளேன். இந்தியா உதவி செய்யவேண்டுமானால் உதவி செய்ய வேண்டியது அந்த மக்களுக்குத் தான். நாம் வெறுக்கக்கூடிய சிலவும் இந்தியாவில் இருக்கின்றன. ஒன்று, நான் ஏற்கனவே கூறிய அந்த அதிகார வர்க்கம். தலைக்கனம், அகங்காரம், தற்பெருமை கொண்ட மரபுவழி அதிகாரவர்க்கம், மற்றது வறுமை,குலபேதம். இவ்வளவு திருட்டுக்களும் மோசடிகளும் நடந்தும் கூட இந்த நாட்டில் அந்த நிலை ஏற்படவில்லை. மாற்றமொன்றை விரைவில் செய்யாது விட்டால் அந்த நிலைமை நமது நாட்டிலும் மிக விரைவில் ஏற்படும். இந்த நிலையில், இந்தியாவுக்குத் தேவைப்படுவது அணு சக்தியல்ல. அந்த வறிய மக்களை மேம்படுத்த சிறந்த திட்டங்கள். ஆனால், இந்தியா இன்று அணு ஒப்பந்தங்களை அமெரிக்காவோடு செய்து கொண்டுள்ளது.

தனது அரசாங்கத்தின் பங்காளிகளான் இந்திய கம்யூனிஸக் கட்சி, இந்திய மார்க்ஸிய கம்யூனிஸக் கட்சி, பார்வார்ட் புளொக் போன்ற கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலே அணு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. இதேபோன்றதொரு அரசாங்கம் தான் இங்கேயும் இருக்கின்றது. இந்த நிலைமைதான் இங்கும் ஏற்பட்டுள்ளது. இந்தியாதான் இந்தப் பிராந்தியத்தின் பெரிய அண்ணன். இந்தியா தானாகவே பெரிய அண்ணனாகி விட்டது. இதற்குத்தான் "Big Brother Politic" என்று கூறுவது. பெரிய அண்ணாவின் அரசியல். அதாவது விஸ்தரிப்புவாத அரசியல். ஆதிக்கவாத அரசியல்.

இந்த அரசியலுக்கு எதிராகத்தான் நாம் தயாராக வேண்டும். இந்தியா எமக்குப் பொருட்டல்ல. அதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 1983 இலிருந்து 85,87 வரையிலான காலகட்டத்தில், இந்த நாட்டில் இந்தியா எந்தளவு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது என்பதை நாம் அறிவோம்.இது எமது நாடு. இங்கு தனக்கு வேண்டியவாறு செயல்பட இந்தியாவை அனுமதிக்கமுடியாது. இந்த நாட்டை நாம் முன்னேற்ற வேண்டும். முதுகெலும்புள்ள தலைவர்கள் அதற்குத் தேவை. எந்த நிலையிலும் தளராத கட்சியொன்று தேவை. உயர்ஸ்தானிகர்களின் வாசஸ் தலங்களுக்கும், தூதுவர்களின் இல்லங்களுக்கும் சென்று ஆசி வாங்கும் தலைவர்களைக் கொண்ட கட்சியினால் இந்தநாட்டை சரியாக வழிநடத்த முடியாது. இந்த நாட்டுக்கு நெஞ்சுரம்கொண்ட நேர்மையான தலைமையொன்று தேவை. நாட்டின் கௌரவத்தைக் கட்டிக் காக்கக் கூடியதாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். நாம் இந்தப் பிராந்தியத்தில் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்.

"சார்க்" என்ற ஒன்று இருக் கிறது. அதற்கு நாங்கள் கீழ்ப் படிந்துள் ளோம். இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சார்க் மாநாட்டுக்கு வரவழைப்பதற்காக நாம் என்னென்னவோ செய்தோம். பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தத்தை வெற்றி கொள்வதில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் மனோதிடத்தைப் பாதிக்கும் செயல்களில் அரசாங்கம் ஈடுபட்டது.மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்காக இந்திய இராணுவம் வரவழைக்கப்பட்டது. இந் நாட்டுக்கு வரும் அரச தலைவரொருவருக்கு பாதுகாப்புவழங்க முடியாதெனில், எமது இராணுவம் இங்கே எவ்வாறு யத்தம் செய்யும்? பிரபாகர னுக்குப் பயந்தே பாதுகாப்புக்கு



படை கொண்டுவரப்பட்டது. பிரபாகரனுக்கெதிராக எமது இராணுவத்தினர் தீரத்தோடு போராடினார்கள். அப்படியானால் எமது இராணுவத்தை ஏன் பாதுகாப்புக்குப் பயன் படுத்த முடியாது. இங்கேயும் எமது இராணு வம் அவமானப்படுத்தப்பட்டுள்ளது. எமது கௌரவம், பேரபிமானம், இறையாண்மை அனைத்தும் களங்கப்படுத்தப்பட்டன. எனவே, இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ் லிம் அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து இந்தியா வெளியுறவுக் கொள்கையை எதிர்க்க வேண்டும். இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு அடிபணியும் தலைவர்க ளையும் எதிர்த்த குரலெழுப்ப வேண்டும்.

பிராந்தியத்திலுள்ள பலநாடுகளை இந்தியா பகைத்துக் கொண்டுள்ளது. அவர்களோடு நாம் ஒத்துழைக்க வேண்டும்.நாம் சிறிய கட்சியாக இருந்தபோதும், பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளோடு சேர்ந்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை சரியான வழிக்குக் கொண்டுவர முடியும். பலம்வாய்ந்த ஒரு சக்தியை எம்மால் உருவாக்க முடியும். அதற்காகத்தான் மக்கள் விடுதலை முன்னணி உழைக்கிறது.அதற்கு ஒரு ஆரம்பம் மட்டுமே தேவை. இந்தியாவின் இந்த தறிகெட்ட வெளியுறவுக் கொள்கைக்கு எம்மால் தலை சாய்க்க முடியாது. அதற்குத்தலைசாய்க்கும் தலைவர்களுக்கும் நாம் தலைசாய்க்க முடியாது.

நாம் இறுதியாகக் கூறுகிறோம். இந்திர குமார்குஜ்ரால் அவர்களின் பஞ்சசீலக் கொள்கையைப் பற்றி. அதனை முதன் முறையாக அமுல்படுத்திய இந்திய வெளியுறவு அமைச்சரின் வார்த்தைகளைக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

"We are different nations on our sub continent. But one People" தெற்காசியப் பிராந்திய உபகண்டத்தில் வாழும் நாம் வேறுபட்ட இனங்கள் என்பது உண்மை. அம்மக்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. அதனை அவர் ஏற்றுக்கொள்கிறார். நாம் அனைவரும் ஒரே மக்கள். ஒதுக்கப்பட்ட மக்களல்ல. ஒரே மரபுவழியைச் சேர்ந்த ஒரே மக்கள் என்பதை நாம் உணர வேண்டும். அவர் அவ்வாறு கூறுவது ஏன்? இந்தப் பிராந்தியத்திலுள்ள எந்தவொரு நாட்டிலாவது மக்கள் துன்பப்படுவார்களேயானால் நாம் வேடிக்கை பார்க்க முடியாது.

**சோமவன்ச அமரசிங்க**
தலைவர்.மக்கள் விடுதலை முன்னணி

அவர்களது உரிமைக்காகவும் நாம் குரலெழுப்பவேண்டும். இந்தப் பிராந்தியத்திலுள்ள மக்களோடு கைகோர்த்து முன் செல்லவேண்டும். எனவே இந்திரகுமார் குஜ்ராலிடம் கற்றுக்கொள்ளுங்கள் என இந்தியாவிடம் கூறுகிறோம். குஜ்ராலின் சித்தாந்தத்தை கடைப்பிடியுங்கள்! இல்லையேல், இந்தியாவின் தறிகெட்ட வெளியுறவு கொள்கைக்கெதிராக எம்மாலான அனைத்தையும் செய்ய தயங்க மாட்டோம்! அதற்காக எங்களோடு அணிவகுக்குமாறு உங்கள் அனை வரையும் வேண்டி விடைபெறுகிறேன். அநீதிக்கெதிராகப் போராடக் கூடிய நெஞ்சுரமும், துணிவும் உங்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்"

(தொடரும்)

# சோனியா- ஜெ. சந்திப்பு கூட்டணியில் மாற்றம் வருமா?

# தமிழக ஆட்சியில் பங்கு கேட்கத் தயாராகிறது காங்கிரஸ்



தேர்தல் கமிஷன் விழாவில் நடந்த சோனியா – ஜெ சந்திப்பு அரசியல் களத்தில் பல்வேறு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் புதிய கூட்டணி என்ற இலக்கை நோக்கி காங்கிரசின் பயணம் தொடங்குவதற்கு இந்தச் சந்திப்பு அச்சாரமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தேர்தல் கமிஷனின் பவள விழாவில் பங்கேற்க வருமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் தேர்தல் கமிஷன் அழைப்பு அனுப்பியது. அந்த வகையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவிற்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அதோடு விவகாரம் முடிந்திருந்தால் பரவாயில்லை. காங்கிரஸ் அனுதாபி என எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்படும் தலைமைத் தேர்தல் கமிஷனர் நவீன் சால்வா ஜெயலலிதாவை இருமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

மற்ற தலைவர்களைப் போல் அல்லாமல் ஜெயலலிதாவிற்கு கிடைத்த இந்த சிறப்பு அழைப்பு குறித்த தகவல் வெளியானதும் அரசியல் அரங்கில் பரபரப்பும் பற்றிக் கொண்டது. சோனியாவின் முழுச் சம்மதத்துடன் தான் ஜெயலலிதாவுக்கு நவீன் சால்வா அழைப்பு விடுத்துள்ளார் என்ற கருத்து அரசியல் வட்டாரத்தில் எழுந்தது.

சால்வாவின் சிறப்பு அழைப்பினை ஏற்று ஜெயலலிதா விழாவில் பங்கேற்றார். சோனியாவை சந்திப்பாரா, அரசியல் பேசுவாரா, கூட்டணி மாறுமா என அடுத்த கட்டமாக எதிர்பார்ப்புக்கள் எழுந்தன. சோனியாவைச் சந்தித்தேன். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டோம் என ஜெயலலிதா கொளுத்திப் போட்ட வெடி அரசியல் வட்டாரத்தை மேலும் சூடேற்றியுள்ளது.

கடந்த 12 ஆண்டுகளுக்குப் பின் சோனியா, ஜெயலலிதா வெறும் ஐந்து நிமிடங்கள் சந்தித்துப் பேசியிருந்தாலும் அந்தச் சந்திப்பு பல அரசியல் கணக்குகளுக்கு வழிவகுத்துள்ளது. தி.மு.க. ஆதரவு இல்லாவிட்டாலும் மத்தியில் ஆட்சி தொடரும் என்ற நிலையிலும் தி.மு.க. அமைச்சர்கள் மத்தியில் அமைச்சரவையில் கோலோச்சி வருகின்றனர்.

ஆனால் தமிழகத்தில் ஆட்சியில் பங்கு என்ற பேச்சை எடுக்கவே தி.மு.க. தயாராக இல்லாத நிலை நிலவுகிறது. தமிழகத்தில் காங்கிரசுக்கும் அரசு அதிகாரம் வேண்டும் என்ற காங்கிரசாரின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற இந்த சந்திப்பு அச்சாரமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளிடம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மூத்த காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் கூறியதாவது, தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை அமைத்தே தீருவேன் என ராகுல் சபதம் எடுத்துள்ளார். இதற்காக தனது பாட்டி இந்திராவின் வழிமுறையைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டுள்ளார். வரும் சட்டசபைத் தேர்தலில் கூட்டாட்சி ஒப்பந்தத்திற்கு உடன்பாட்டால் தி.மு.க.வுடன் கூட்டணியில் நீடிப்பது என அவர் முடிவு செய்துள்ளார். இல்லாவிட்டால் அ.தி.மு.க.வுடன் கூட்டணியை உருவாக்கி அதே ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதுதான் ராகுலின் திட்டம்.

இத்திட்டத்திற்கு ஆர் பிளான் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சமீபத்தில் நடந்த வருமான வரி ரெய்டு, சோனியா – ஜெ. சந்திப்பு போன்ற நிகழ்வுகள் அனைத்தும் இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாகவே பார்க்கிறோம். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு தி.மு.க. ஆதரவோ, தயவோ தேவையில்லை. மத்திய அரசில் இடம்பெற்றுள்ள சில தி.மு.க. அமைச்சர்களால் அரசுக்கும் காங்கிரசுக்கும் தேவையில்லாத களங்கம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் காங்கிரஸ் ஆதரவுடன் தி.மு.க. ஆட்சி நடக்கிறது. ஆனால் காங்கிரசுக்கு





அமைச்சரவையில் இடம்தரவில்லை.

அடுத்த தேர்தலில் கூட்டாட்சிக்கு சம்மதிக்கும் கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்ற மன ஓட்டத்தில்தான் தொண்டர்களும் உள்ளனர். இதைப் பிரதிபலிப்பதுபோல்தான் 'லோக்சபா தேர்தலுக்கு முன் அ.தி.மு.க.விடம் ஏன் கூட்டணி வைக்கக்கூடாது என ராகுல் குறிப்பிட்டார்.

இளைஞர் காங்கிரஸ் தேர்தல் தொடர்பாக தமிழகத்திற்கு ராகுல் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது முதல்வர் கருணாநிதியை அவர் சந்திக்க விரும்பவில்லை. தேர்தல் கமிஷன் விழாவில் சோனியா, ஜெயலலிதா, மம்தா பானர்ஜி ஆகிய மூன்று பேரும் முதல் வரிசையில் உட்கார வைக்க முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த தகவல் தி.மு.க.விற்கு தெரிய வந்த நிலையில் கடும் வற்புறுத்தலால் இந்த முடிவு மாற்றப்பட்டது. சோனியா மேடையில் அமர வைக்கப்பட்டார்.

நெல்லை மாவட்டத்தில் நடந்த வீரவணக்க பொதுக்கூட்டத்தில் பேசிய தி.மு.க. மூத்த அமைச்சர் ஒருவர் யார் எந்தக் கூட்டணியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தி.மு.க.வை எந்த கொம்பனாலும் அசைக்க முடியாது. தேர்தலில் 200 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும் என ஆவேசமாக பேசியுள்ளார். சட்ட சபை தேர்தல் நெருங்கும் வேளையில் ஆர் பிளான் முழுமையாக செயற்படுத்தப்படும். ஆட்சியில் பங்கு என்ற உறுதி மொழியைக் கொடுக்கும் கட்சியுடன் தான் தமிழகத்தில் காங்கிரஸ் அணி சேரும். அதற்கான வாய்ப்பை தேர்தல் கமிஷன் பவளவிழா ஏற்படுத்தித் தந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (2-6)

# இலங்கை ஜனாதிபதித் தேர்தல் நீதியாக நடைபெறவில்லை

## கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றச்சாட்டு

ஆரம்பம் முதலே வெற்றிபெறும் குறுகிய நோக்கத்தில் இம்முறை நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் நடத்தப்படவில்லை என சி.எம். வி.பி. மற்றும் கபே ஆகிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் முகாம்களில் இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்தபோதிலும் தேர்தல் தினத்தன்று முற்பகல் 11 மணி வரை பேரூந்துகள் அங்கு செல்லவில்லையென சி.எம்.வி.பி.யின் இணை ஏற்பாட்டாளர் உதய களுபத்திரன தெரிவித்துள்ளார்.

வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்களுக்கு வாக்குரிமை உள்ளது.

இருந்தபோதிலும் அவர்களிடம் தேசிய அடையாள அட்டை அல்லது தேர்தல் செயலகத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை எனத் தெரிவித்துள்ள உதய களுபத்திரன இந்த நிலைமையானது இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்கக் காரணமாக அமைந்தது என தமது அமைப்பு காண்பதாகக் கூறியுள்ளார்.

தேர்தல் ஆரம்பிக்கப்பட்டபோது யாழ். குடாநாட்டில் வாக்களிப்பை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றதாக கபே அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ரஜீத் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் பல பகுதிகளில் தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற வன்முறை நிலைமை காரணமாக வாக்காளர்கள் மத்தியில் வாக்களிப்பதில் அச்சம் ஏற்பட்டதாகவும் வடபகுதி தமிழ் மக்கள் மத்தியில் நாட்டின் தேர்தல் முறைமை தொடர்பாக பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் கிர்த்திதென்னகோன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# தேர்தல் ஆணையாளர் பதவி விலகல் தொடர்பான சட்டச் சிக்கல்கள்

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க பதவியை இராஜினாமா செய்வதில் சட்டச் சிக்கல்கள் காணப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. உச்ச நீதிமன்றத்தின் அனுமதியுடனேயே அவர் பதவி விலக முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளர் பதவி விலகக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுவதாகவும் தேர்தல் ஆணையாளர் பதவி விலகுவது தொடர்பில் அரசியல் சாசன ரீதியான சர்ச்சை எழக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

தயானந்த திஸாநாயக்க பதவி விலகினால் தேர்தலை நடாத்துவதற்கு அதிகாரமுடைய வேறும் தரப்பினர் இல்லை என



ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பின் பணிப்பாளர் ஜே.சீ. வெலியமுன தெரிவித்துள்ளதுடன் 17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக சுயாதீன ஆணைக் குழுக்கள் மற்றும் அரசியல் சாசன சபை ஆகியன அமைக்கப்படாமையே இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தேர்தல் ஆணையாளர் தன்னிச்சையாக தமது பதவியை இராஜினாமாச் செய்ய முடியாது எனவும் உச்ச நீதிமன்றில் கோரிக்கை விடுப்பதன் மூலம் பதவியை இராஜினாமா செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உச்ச நீதிமன்றில் அவரது பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதனால் நீதிமன்றின் உதவியுடன் அவர் பதவி விலக முடியும் என வெலியமுன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தயானந்த திஸாநாயக்க பதவி விலகினால் உச்ச நீதி மன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# அரசியல் கட்சிகளின் 1000 ஆதரவாளர்கள் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் கைது செய்யப்படுவர்

## பொலிஸ் தரப்பு தெரிவிப்பு


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகளை மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அரசியல் கட்சிகளின் சுமார் 1000 ஆதரவாளர்களை கைது செய்யவுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்படவுள்ளவர்களில் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதாள உலகக் குழுவினர் இராணுவத்தில் இருந்து தப்பி வந்தோரும் அதில் அடங்குவதாக தேர்தலுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் நியமன காலத்தில் இருந்து 1080 வன்முறை முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. தேர்தல் தினத்தில் மாத்திரம் 50 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைக்க அமெரிக்கா முடிவு



(வோஷிங்டன்)

வளிமண்டலத்தைப் பாதிக்கும் கரியமில வாயு வெளியேற்றத்தை 28 சதவீத அளவுக்குக் குறைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த இலக்கை 2020ஆம் ஆண்டுக்குள் எட்டப் போவதாக அதிபர் ஒபாமா அறிவித்துள்ளார். ஓசோன் மண்டலத்தில் துளைகள் ஏற்பட்டு அதனால் புவி வெப்பமடைவது உலகையே அச்சுறுத்தும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சமீபத்தில் கோபன் ஹேகன் மாநாட்டில் கூட திட்டவட்டமான முடிவு எட்டப்படவில்லை.

வளர்ச்சியடைந்த நாடுகள்தான் அதிக அளவில் கரியமில வாயு வெளியேற்றுகின்றன என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது. இந்நிலையில் கரியமில வாயு வெளியேற்றத்தை 28 சதவீதம் வரை குறைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இலக்கை எட்டுவதற்கு சூழல் பாதிப்பு இல்லாத எரிசக்தி முறையை பின்பற்ற வேண்டியிருக்கும். இதனால் புதிய வேலை வாய்ப்புக்கள் அதிக அளவில் உருவாகும் என்று ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாகவும் அதன் மூலம் புதிய தொழில் முனைவோர் உருவாகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைச் செயற்படுத்துவதற்கான உத்தரவில் ஒபாமா கையெழுத்திட்டுள்ளதாக வெள்ளை மாளிகையிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எரிசக்தி உபயோகத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. மின்சாரத்துக்கு ஆண்டுக்கு 2450 கோடி டொலரை அமெரிக்கா செலவிடுகிறது. எரிசக்தி உற்பத்தி மூலம் அதிக அளவில் கரியமில வாயு வெளியாகிறது.

இதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அமெரிக்கர்களாகிய நமக்கு உள்ளது. இதனால் சூழலைப் பாதிக்காத எரிசக்தி தேவையை நாம் உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. அதைத் திறம்படச் செயற்படுத்த வேண்டும் என்று ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் குறைந்த செலவில் அதேசமயம் சூழலை பாதிக்காத வகையில் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். எண்ணெய் மூலம் பெறப்படும் எரிசக்தி தேவையைக் காட்டிலும் உள்ளூரில் கிடைக்கும் மரபு சாரா எரிசக்தி மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயலவேண்டும். இது தவிர 1.70 கோடி கார்கள் ஓராண்டில் புதிதாக வாங்கப்பட்டுள்ளன.

இவை வெளியிடும் கரியமில வாயுவும் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவற்றையும் குறைக்க முயற்சிக்க வேண்டும். தற்போது வெளியாகும் கரியமில வாயு அளவு 28 சதவீதம் குறைக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## வடமேற்கு பாகிஸ்தானில் தற்கொலைத்தாக்குதல்

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் இராணுவ சோதனைச் சாவடி அருகே தற்கொலைத்தாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் குறைந்தபட்சம் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் இருவர் பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் என்றும் இந்தச் சம்பவத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே இருக்கின்ற பஜூர் பழங்குடியின பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்க ஆளில்லா விமானம் ஆயுததாரிகளின் வளாகம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-6)




## ஹெயிட்டி நில நடுக்கத்தில் 84 ஐ.நா.பணியாளர்கள் பலி

(நியூயோர்க்)

ஹெயிட்டியில் கடந்த 12ஆம் திகதி ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் ஐ.நா.பணியாளர்கள் 84 பேர் பலியாகியுள்ளனர்.

ஐ.நா. செய்தித் தொடர்பாளர் மேரி ஒகாபே இதை தெரிவித்தார்.

அங்கு இன்னும் ஏராளமான ஐ.நா. ஊழியர்கள் பலத்த மற்றும் லேசான காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 15 பேரின் நிலை என்னவென்றே தெரியவில்லை. இதனால் பலியனோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாகவும் மேரி ஒகாபே மேலும் தெரிவித்தார்.

ஹைட்டியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மொத்தம் 1இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் பலியாகினர். ஆயிரக்கணக்கானோர் காயங்களுடன் தப்பினர். 10இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்து பரிதவிக்கின்றனர்.

மேலும் நிவாரண நடவடிக்கை முழு வீச்சில் நடைபெற்று வந்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உணவு, குடிநீர், மருந்துப் பொருள்கள் ஆகியவை வழங்குவது சிரமமாகவுள்ளது என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-6)

## ஜேர்மனியில் கடும் பனிப்பொழிவு 300 வீதி விபத்துக்கள்; போக்குவரத்துத் தடை

ஜேர்மனியில் பெய்துவரும் கடும் பனிப்பொழிவினால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பனிப்பொழிவினால் நாடு முழுவதிலும் 300 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு ரெயின் பகுதியில் ஒருவரும் தென்சோவ் பகுதியில் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

சில பகுதியின் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் விமானப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

றொஸ்டொக் நகரில் 30 சென்றி மீற்றர் அளவிற்குப் பனி படர்ந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)



ஜப்பான் அருகே உள்ள ஒக்கினாவா என்ற தீவில் அமெரிக்க கடற்படை தளம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து டோக்கியோ நகரில் 6 ஆயிரம் பேர் திரண்ட கண்டனப் பேரணி நடந்தது. இதில் பங்கேற்றவர்கள் அமெரிக்காவிற்கு எதிரான வாசகங்கள் அடங்கிய அட்டைகளை ஏந்தி கோஷமிட்டனர்.

## கனடாவில் இந்தியருக்கு செனட் உறுப்பினர் பதவி

(ரொறண்டோ)

கனடாவைச் சேர்ந்தவர் விம்கோச்சர் (வயது 73) கடனா வாழ் இந்தியரான இவர் அங்கு வியாபாரம் செய்து வருகிறார். கனடா பாராளுமன்றத்தில் செனட் உறுப்பினராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான உத்தரவை கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் பிறப்பித்துள்ளார். செனட் உறுப்பினராக கோச்சர் அடுத்த வாரம் பதவி ஏற்கவுள்ளார். இந்தியாவில் பிறந்த கோச்சர் அமெரிக்காவின் டெக்காஸ் பல்கலைக் கழகத்தில் என்ஜினியரிங் பட்டம் பெற்றார். கனடாவுக்கு 1967ஆம் ஆண்டு சென்று குடியேறினார். (2-6)

## 2 அமெரிக்க இராணுவத்திரை சுட்டுக்கொன்ற ஆப்கானிஸ்தானின் மொழிபெயர்ப்பாளர்

ஆப்கானிஸ்தான் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் அமெரிக்கத் துருப்பினர் இருவரைச் சுட்டுக்கொலை செய்துள்ளார்.

கிழக்கு ஆப்கானிஸ்தான் பகுதியில் இந்தத் துரதிஸ்டவசமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய நபர் திடீரென ஆப்கானிஸ் தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ளார்.

குறித்த மொழிபெயர்ப்பாளரை ஏனைய வீரர்கள் சுட்டுக் கொன்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மொழிபெயர்ப்பாளர் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவரை ஓர் தீவிரவாதி எனக் கருத முடியாது எனவும் அமெரிக்கப் பாதுகாப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு ஆப்கானிஸ்தான் படைவீரர்கள் உயிரிழந்துள்ளனர். தவறுதலாக இந்த வான் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இது தொடர்பில் மன்னிப்புக் கோருவதாகவும் நேட்டோ அறிவித்துள்ளது. (2)

## ஹெயிட்டியிலிருந்து குழந்தைகளை கடத்திய அமெரிக்கக் கும்பல் கைது

(போர்ட் ஓவ் பிரின்ஸ்)

அமெரிக்கா அருகேயுள்ள ஹெயிட்டி தீவில் கடந்த 12ஆம் திகதி கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. அதில் 2 இலட்சம் பேர் பலியானார்கள். எனவே பெரும்பாலான குழந்தைகள் தாய், தந்தையை இழந்து அநாதைகளாகிவிட்டனர்.

மேலும் அங்கு உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் தவிக்கின்றனர். பசி, பட்டினியால் வாடுகின்றனர். அத்துடன் அங்கு கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை பெற்றோரை இழந்த அநாதைகளாகி ஆதரிக்க யாரும் இன்றி தவிக்கும் குழந்தைகளைக் கடத்தும் கும்பலும் நடமாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் பூகம்பம் பாதித்த போர்ட் ஓவ் பிரின்ஸ் நகரில் இருந்து 33 அநாதைக் குழந்தைகளை அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கும்பல் கடத்திச் சென்றது.

இதை அறிந்த ஹெயிட்டி பொலிசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து அவர்கள் டோமினிக்கன் குடியரசு எல்லை வழியாக குழந்தைகளைக் கடத்த இருப்பது தெரியவந்தது.

உடனே அங்கு சென்று குழந்தைகளை கடத்த முயன்ற அமெரிக்கர்கள் 10 பேரை கைது செய்த பொலிசார் அவர்களிடம் இருந்து குழந்தைகளை மீட்டனர். அத்துடன் பிடிபட்டவர்களிடம் விசாரணையும் நடத்தப்பட்டது.

விசாரணையில் தாங்கள் அமெரிக்காவில் இடாகோ பகுதியில் உள்ள பாபிஸ்ட் சர்ச் உறுப்பினர்கள் என்றும் ஹெயிட்டியில் அநாதைகளாக இருக்கும் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்காக அழைத்துச் செல்வதாகவும் அவர்கள் கூறினர்.

ஆனால் அவர்களிடம் அதற்கான முறையான ஆவணங்கள் இல்லாததை அடுத்து அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஹெயிட்டியின் தகவல் தொடர்பு அமைச்சர் மரி லாரன்ஸ் ஜோஸின் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் சிறைக்குச் சென்று அவர்களிடம் விசாரணை நடத்தினர். (6)

### நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில்

# ஜே.வி.பியினரின் கோரிக்கை ஐ.தே.கட்சியால் நிராகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத்பொன்சேகாவை முன்னிறுத்தி அன்னப்பட்சி சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் ஜே.வி.பி.முன்வைத்த கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முற்றாக நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவரும் முன்னாள் அமைச்சருமான ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி பதவிக்கு ஒருவரே தெரிவு செய்யப்படுவார் என்பதற்கமையவே நாம் சரத்பொன்சேகாவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தினோம்.

ஆனால் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் பொன்சேகாவை முன்னிறுத்தி அன்னப்பட்சி சின்னத்தில் போட்டியிடுமாறு எம்மைக் கோருவது வேடிக்கையானதொரு விடயம்.

இந்த நாட்டில் சக்திவாய்ந்த கட்சியாக வாக்குப் பலமிக்கதாகவும் எமது ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. எமது யானைச் சின்னம் கூட மக்கள் மனதில் பதிந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க உட்பட மேலும் பலர் எமது கட்சியில் தன்மை வேட்பாளராகப் போட்டியிடும் தகுதியைக் கொண்டுள்ளனர்.

ஆகவே இவர்களை விட்டு வெளியே வேறு யாரையும் தேட வேண்டிய தேவை எமக்கு இல்லை. இதுபோன்றே எமது கட்சிச் சின்னத்தை நாம் அழிந்துபோக விடமாட்டோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதனுடன் கூட்டுச் சேரும் கட்சிகளுடன் இணைந்து யானைச் சின்னத்திலேயே போட்டியிடும். இதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் எம்முடன் இணைந்து போட்டியிடும் கட்சிகளுக்குச் சில இடங்களை விட்டுக் கொடுப்பது என்பது வேறு. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை எடுத்துப் பார்த்தால் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு அதிகரித்துள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால் ஜே.வி.பிக்கு மக்கள் ஆதரவு குறைந்துள்ளது.தெற்கில் அவர்களது கோட்டைகள் சரிந்துள்ளன. அவர்களது சரிவை எமது கட்சியே இன்று சமப்படுத்தியுள்ளது. இந்த உண்மையை அவர்கள் மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை முன்னிறுத்தி அன்னப்பட்சிச் சின்னத்தில் போட்டியிடுமாறு ஜே.வி.பி.எம்மைக் கோருவதானது அவர்களது தோல்வியை மறைக்க எம்மைப் போர்வையாகப் பயன்படுத்தும் ஒரு முயற்சியே. இது ஒருபோதும் நடக்காது என்றும் கூறினார். (2-6)

### எவ்வித தயக்கமுமின்றி

# மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துங்கள்

## -ஜனாதிபதி பணிப்பு-



மஹிந்தவின் சிந்தனை எதிர்கால நோக்கு இரண்டாம் பாகத்தை எவ்வித தாமதமும் இன்றி உடனடியாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

மஹிந்தவின் சிந்தனையில் முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு யோசனைகளை முன்வைத்த வளவாளர்களை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி இந்தப் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

வளவாளர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி எவ்வித தாமதமும் இல்லாமல் மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துங்கள் என்றார்.

இலங்கையை ஆசியாவிலேயே வர்த்தக, விமான, கடற்போக்குவரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்றுவதற்காகச் செயற்படவேண்டும். இதன்மூலம் மக்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் நாடு முக்கிய பங்காற்ற முடியும்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு விவசாய அபிவிருத்தியை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த மஹிந்த சிந்தனை ஆலோசனை மூலம் நாடு சுபீட்சம் பெறும் . ஒழுக்கமுள்ளதும் சட்டத்தை மதிப்பதுமான சமூகத்தைக் கட்டியெழுப்பி வீடமைப்பு, மின்சாரம், நீர் விநியோகம் மற்றும் தொடர்பாடல் வளங்களை உடனடித் தேவையாகக் கருதி பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

### ஆறுதலான அமைதியான நிலையில்

# ஐ.நா. செயலாளர் பான் கீ மூன்

## இன்னசிற்றி பிரஸ் விமர்சனம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரின் அலுவலகம் சோதனையிடப்பட்டிருக்கின்றது. இலங்கையிலிருந்து செய்தியாளர் ஒருவர் வெளியேற்றப்பட்டுள்ளார். இதன் பின்னரும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆறுதலான அமைதியான நிலையில் இருக்கிறார் என இன்னர் சிற்றி பிரஸ் அவரை விமர்சித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனவரி 27 ஆம்திகதி எதிர்க்கட்சியின் வேட்பாளர் சரத்பொன்சேகா இலங்கைப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தான் ஆறுதலைடைந்துள்ளதாக ஊடகங்களிடம் கூறினார். பல தரப்பினரால் வலியுறுத்தப்பட்ட தேர்தல் ஒழுங்கீனங்கள் குறித்து இன்னர் சிற்றி பிரஸ் கேட்டபோது பான் கீ மூன் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

அதன்பின் இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் அரசாங்கம் தேர்தல் ஒழுங்கீனங்கள் தொர்பாக கேள்வி எழுப்பும் ஊடகவியலாளர்களுக்கு விசாவை நிராகரித்து நாட்டை விட்டு வெளியேற்றும் கட்டத்திற்குச் சென்றுள்ளது.

ஜனவரி 29 ஆம் திகதி ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்படுவதை எதிர் நோக்கிய நிலையில் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் சோதனையிடப்பட்ட நிலையில் பான் கீ மூன் இன்னும் ஆறுதலடைந்த நிலையில் இருக்கிறாரா என ஐ.நா.வின் இணைப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவர் இன்னும் ஆறுதலடைந்துள்ளார் என ஹக் கூறினார். தேர்தல் தினம் ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்ததாக ஹக்கூறினார். அதன் பின் விதிகளுக்கு கீழ்ப்படிந்து செயற்படுமாறு அவர் கோரியதை ஹக் மீண்டும் வாசித்தார்.

ஆனால், அந்தக் கோரிக்கை தாக்கம் எதையும் ஏற்படுத்தவில்லை. அதன்பின்னர், பான் கீ மூன் தனது நண்பர் எனக் கூறும் மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகம் எதிராளிகள் மற்றும் சுதந்திர ஊடகங்களை மேலும் ஒடுக்குகிறது.

பான் கீ மூன் லண்டன் சைப்பிரஸ் மற்றும் எதியோப்பியா ஆகிய இடங்களுக்குச் செல்வதற்குத் தயாராகிறார். அவர் இலங்கையில் நிலவும் ஒடுக்குமுறைகள் குறித்த வினாக்களுக்கு பதிலளிப்பாரா என்று தெரியவில்லை. (2-6)

# அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்தும் வதந்திகளை பரப்புவோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் வகையில் வதந்திகளைப் பரப்பி வருவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான வகையில் போலியான பிரசாரங்கள் மற்றும் வதந்திகளைப் பரப்புவோரை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு போலியான பிரசாரங்களை மேற்கொள்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பாக எஸ்.எம்.எஸ். இணையம் மற்றும் மின்அஞ்சல் ஆகிவற்றின் மூலம் இவ்வாறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் போலிப் பிரசாரங்களை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பான தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 529 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் லேன்
இலக்கம் 54 ஐச் சேர்ந்த சோமசுந்தரம்
மகள் தையலம்மா அல்லது
தையலம்மை என்பவரின்
மரணசாதனமில்லாத மரணச்
சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்.

சோமசுந்தரம் இராமலிங்கம் மகள்
பரமேஸ்வரி
இல. 54 பிரப்பங்குளம் லேன்
யாழ்ப்பாணம்.

வழ.இல. தத்துவம்/123

மனுதார்

எதிராக

சோமசுந்தரம் இராமலிங்கம் மகள்
மகேஸ்வரி
இல. 54 பிரப்பங்குளம் லேன்
யாழ்ப்பாணம்.

எதிர்மனுதார்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விருப்பாவணம் எதுவும் விட்டுச் செல்லாத சோமசுந்தரம் மகள் தையலம்மா அல்லது தையலம்மை என்பவரின் மரபுரிமையாளர் சான்றிதழ் ஒன்றின் வழங்குகைக்கென கட்டளையொன்றை ஆக்கும்படி மனுதாரால் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு ஆட்சேபனையுடைய ஆள் எவரும் 2010 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 10 திகதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**வரைந்தவர்**
**மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி**

**நீதிமன்றக் கட்டளைப்படி**
**பதிவாளர்**

(537)

# தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த ஆலோசனை

(கொழும்பு)

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திருத்தச் சட்ட மூலமொன்றை நிறைவேற்றிக்கொள்ளுமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் இலகுவாக அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் மூன்றில் இரண்டுபெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொள்ள இன்னமும் 19 ஆசனங்கள் மட்டுமே அரசாங்கத்திற்கு தேவைப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (2-6)

## மீண்டும் சீனாவில் நிலநடுக்கம்

கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள சிச்சுவான் நகரில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 8.0 ஆக இருந்தது. அப்போது வீடுகள் இடிந்து விழுந்ததில் 87 ஆயிரம் பேர் பலியானார்கள்.50 இலட் சம் பேர் வீடுகளை இழந்தனர்.

அங்கு நிவாரணப் பணிகள்,புதிய வீடுகள் கட்டும் பணிகள் முழு வீச்சில் நடந்து வந்தன. 90 சதவீத பணிகள் முடிவடைந்த நிலையில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு மீண்டும் சிச்சுவான் நகரில் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது.இது ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவானது. உடனே பீதியில் மக்கள் வீட்டை விட்டு வெளியேறி வீதிக்கு வந்தனர். இதில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி தகவல்கள் கிடைக்கவில்லை. (2)



தைப்பூசத்தினத்தன்று சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற உழவர் தின விழாவில் மாணவர்கள் அரிவி வெட்டத் தயாராவதையும் மாணவிகள் அரிவி வெட்டி களைப்படைந்த சக தோழர்கள் தாகம் தீர்க்க கஞ்சி கலசம் ஏந்திச் செல்வதையும் அறுவடை செய்து நெல் குத்தி அரிசி எடுத்து பொங்கல் செய்வதையும் அருகில் நிலைய நிறுவுனர் திருமதி மகாலிங்கம் நிற்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :சாவகச்சேரி நிருபர்)

## சுவிஸ் ஊடகவியலாளரின்

# விசா மறுப்பு உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து ஊடகவியலாளரின் விசா மறுப்பு விவகாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையீடு செய்துள்ளார்.

சுவிஸ் வானொலிச் சேவையைச் சேர்ந்த குறித்த பெண் ஊடகவியலாளர்கள் இன்று நாடு திரும்ப வேண்டுமென அரசாங்கத் தகவல் திணைக்களம் முன்னர் உத்தர விட்டிருந்தது.

எனினும் குறித்த ஊடகவியலாளருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விசா காலம் வரையில் தங்கியிருக்க முடியும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதன்படி அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேறச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரையிலும் குறித்த ஊடகவியலாளர்கள் இலங்கையில் தங்கியிருக்க முடியும் என அறிவிக்கப்படுகிறது. (2-6)

# லங்கா பத்திரிகை தொடர்பான விசாரணைகளின் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

லங்கா பத்திரிகை தொடர்பான விசாரணைகளின் அறிக்கை இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

லங்கா பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த சம்பவ தொடர்பாக அந்த பத்திரிகை அலுவலகத்தின் மேலும் சிலரை விசாரணை செய்ய நடவடிக்கை எடுப் பதாக குற்றப்புலனாய்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)

# தேர்தல் முடிபுகள் குறித்து அமைச்சர்கள் ஆச்சரியம்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிபுகள் சம்பந்தமாக பெரும் ஆச்சரியம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்க அமைச்சர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் நிச்சயமாக வெற்றிபெறுவார் என்ற நம்பிக்கை இருந்த போதிலும் அவர் 18 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெறுவார் என தாம் எதிர்பார்க்கவில்லை என அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அழிவுக் காலத்தின் விபரீத புத்தி என்ற நிலைமை இந்தத் தேர்தல் முடிபுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த வெற்றி குறித்து தம்மால் நிலைப்பாடொன்றுக்கு வர முடியாதுள்ள தாகவும் மற்றுமொரு அமைச்சர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ இம்முறை தேர்தலில் நிச்சயமாக வெற்றிபெறுவார் எனத் தாம் பகிரங்கமாகக் கூறியதாகத் தெரிவித்துள்ள மற்றுமொரு அமைச்சர் ஜனாதிபதித்தேர்தல் பாரிய போட்டியிலேயே முடிவடையும் என தான் எண்ணியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தொடர்பான தேசியக் கொள்கை

வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தொடர்பான தேசியக் கொள்கையொன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்பேணல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் கீழ் இலங்கைப் பணிப்பெண்களுக்கு வெளிநாடுகளில் விசேட பாதுகாப்புக் கிடைக்குமென அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வீட்டுப் பணிப் பெண்கள் என்ற வகையில் அல்லாமல் வீட்டுப் பரா மரிப்பாளர்கள் என்ற வகையில் இலங்கைப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பு வதற்கான விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# பொதுத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட ஜே.வி.பி. - ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே. வி. பி. ஆகியன தனித் தனியாகத் தேர்தலில் களமிறங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு யானைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜே.வி.பி. கட்சி மணிச் சின்னத்தில் தேர்தலில் களமிறங்கக்கூடிய அதிக சாத்தியம் காணப் படுவதாகவும் ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றியீட்டியிருந்தால் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியும் அன்னப் பறவை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் தேர்தலில் அடைந்த தோல்வியின் காரணமாக இரண்டு பிரதான எதிர்க்கட்சிகளும் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளன. (2-6)

# தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான ஒற்றுமை இத்தேர்தல் மூலம் கிடைத்த வெற்றி

## -ஏ.எம்.நௌஸாத் தெரிவிப்பு-

(கொழும்பு)

ஆட்சி மாற்றத்திற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு , முஸ்லிம்காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விடுத்த அறைகூவலை தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்று ஒற்றுமையுடன் அள்ளிக்குவித்த வாக்குகளால் இன்றைய ஆட்சியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் என திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.நௌஸாத் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலில் எமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வெற்றி தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஏற்றப்பட்ட ஒற்றுமையும் புரிந்துணர்வுமாகும். இதனாலேயே இன்றைய அரசில் அதிகாரப்பதவிக்காக சமூகங்களுக்கு துரோகம் இழைத்தவர்கள் அனைவரும் செல்வாக்கற்ற தலைமைகளாக மாறியுள்ளனர்.

எனவே தான் தமிழ் பேசும் மக்களாகிய எம்மிடம் உள்ள இந்த உறவு நிலை எதிர்காலங்களிலும் தொடரவேண்டும். நாம் பிரிந்து நின்றால் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இதற்காக வேண்டி நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.எமது சமூகங்களின் நலனைக் கருத்தில் கொண்டு எமது இணைப்பு மேலும் வளர திறந்த மனதுடன் நாம் உழைக்கவேண்டியுள்ளது. அடக்கப்பட்ட , ஒடுக்கப்பட்ட சமூகமாக நாம் நாணி , கூனி வாழ முடியாது. பட்டம் பதவிகளைக் கருத்தில் கொண்டு சமூகத்தை அடகு வைக்கவும் இடமளிக்க முடியாது.

கடந்த காலங்களில் எம்மை அடகு வைத்து பதவிகளை பெற்றுக்கொண்டவர்களாலேயே நாம் கஷ்டப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டோம்.

எமது சக்தியின் பெறுமதியை உணர்ந்து ஆட்சியாளர்கள் எம்மிடையே வேற்றுமைகளை ஏற்படுத்த பல்வேறுபட்ட ஆசை வார்த்தைகளை அள்ளி வீசுவார்கள். அதற்காக நாம் பிளவு பட்டுவிட முடியாது.ஒற்றுமையே எமது பலம். அதுவே எமது உரிமைகளைப் பெறுவதற்கான கருவி.பேரினவாதிகளை மண்டியிடச் செய்வதும் அதுவே என்பதை யும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார். (2-6)

# சிறையிலிருந்து வந்ததும் சமூக சேவை செய்வேன்

## நளினி தெரிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினிக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. 19 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் தன்னை விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக ஆய்வு நடந்து வருகிறது. இது குறித்து நளினியின் வக்கீல் துரைசாமி கூறியதாவது:

நளினி சிறையில் இருந்து வெளியே வந்ததும் குடும்ப வாழ்க்கைக்குச் செல்ல விரும்பவில்லை. சமூக சேவையில் ஈடுபடப்போவதாகவும் ஏழைகள் மற்றும் அடி மட்டத்தில் உள்ள பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபடப் போவதாக என்னிடம் கூறினார்.

ராஜீவ் கொலை பற்றி நளினிக்குத் தெரியும் என்று கருதியே பிரியங்கா நளினியை சிறையில் சந்தித்தார். ஆனால் ராஜீவ் கொலை பற்றி நளினிக்கு தெரியாது. எனவே இருவரின் குழந்தைகள் படிப்புத் தொடர்பாக பேசிய பேச்சை முடித்து கொண்டனர்.

சிறையில் அவர் மற்ற கைதிகளைப் போல நடத்தப்படவில்லை. அவர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறார். அங்கு மற்ற இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை. சிறை அதிகாரிகள் தவிர யாரையும் சந்திக்க அனுமதிப்பது இல்லை. மிக மோசமான நிலையில் இருக்கிறார்.

அவர் அடைக்கப்பட்டுள்ள அறையில் ஜன்னல் கிடையாது. இரும்பு கம்பி கதவு மட்டும் உண்டு. அங்கே சமைத்துக் கொள்கிறார். இந்த அறைக்குள் இருந்தபடி தான் பல பட்டப்படிப்புக்களை முடித்துள்ளார்.

பிரியங்கா சந்தித்தபோது நளினி மிக மகிழ்ச்சியாக இருந்தார். இவ்வாறு அவர் கூறினார். (2-6)

# புலிகள் பதுக்கிவைத்திருந்த தங்கம் எங்கே?

## பொன்சேகாவுக்கு தொடரும் நெருக்கடிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் வெற்றியை அடுத்து பொன்சேகா மீது புதிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணை நடத்த அரசு தீவிரம் காட்டுகிறது. இதற்கமைய வன்னிப் போரின் போது விடுதலைப்புலிகளிடம் கைப்பற்றப்பட்ட நான்காயிரம் கிலோ தங்கம் பற்றிய விசாரணையும் நடக்கும் என்று பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தோல்வியை அடுத்து பொன்சேகாவுக்கு நெருக்கடி ஏற்பட்டது. அவர் தங்கியிருந்த ஹோட்டலை இராணுவம் சுற்றிவளைத்தது. தன்னை இராணுவத்தினர் கொன்றுவிடுவர் என்று குற்றஞ்சாட்டினார். இவற்றை மறுத்துள்ள அரசு பொன்சேகா மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகிறது. இராணுவத்தில் பொன்சேகாவுடன் பணியாற்றிய சிலருடன் சேர்ந்து இலங்கையில் வன்முறை நடத்த சதி, ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கொல்லச் சதி என்ற குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல் இன்னும் நீளும் என்று அரசாங்கம் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இறுதிக்கட்டமாக உள்நாட்டுப்போர் வன்னியில் நடந்தது. இவற்றில் பெரும் பகுதி பல ஆண்டுகளாக புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இந்தப் பகுதிகளை இராணுவம் பிடித்தபோது அங்கு கைப்பற்றப்பட்ட பொருட்களில் புலிகள் குவித்திருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் தவிர மற்றவை பற்றி எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பதுக்கி வைத்திருந்த பொருட்கள் பற்றிய கேள்வி போர் முடிந்தவுடன் எழுந்தது. ஆனாலும் அது பற்றி வெளிப்படையாக எதுவும் பேசப்படவில்லை. புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் நான்காயிரம் கிலோ தங்கம் இருந்ததாக அரசு தரப்பில் தகவல் கசியவிடப்பட்டுள்ளது.

அவற்றை இராணுவம் பறிமுதல் செய்ததாகவும் கூறப்படுகிறது. அதில் ஒரு குன்றிமணி தங்கம் கூட அரச கஜானாவில் சேர்க்கப்படவில்லை. அப்படியானால் அந்தத் தங்கம் எங்கே என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இறுதிப் போர் உக்கிரமாக நடந்த போது வன்னிப் பகுதி முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. அங்கு வேறு யாரும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. அப்படியானால் புலிகள் பதுக்கிய தங்கம் எங்கே போனது என்ற கேள்வி இப்போது எழ ஆரம்பித்துள்ளது. புலிகள் தங்கத்தை பதுக்கி



வைத்திருந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

உக்கிரமான போர்ச் சூழலில் படையை வழி நடத்திய அதிகாரிகளுக்கு மட்டும்தான் அங்கு என்ன நடந்தது, என்ன இருந்தது என்ற விபரம் தெரியும். போர் நடந்த பகுதிகளுக்கு வந்து செல்ல இராணுவத்தில் உயர் மட்டத்தில் இருந்தவர்களுக்கு மட்டுமே அனுமதி இருந்தது.

இந்த நிலையில் போர்க்களத்தில் இருந்த தலைமைத் தளபதி பொன்சேகா மற்றும் அவருக்கு நெருக்கமான அதிகாரிகள் மட்டுமே புலிகள் பகுதியில் நடந்த உண்மையை அறிவர் என்ற பரபரப்பு தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## தமிழ் மக்களுடனான நல்லிணக்கமே அர்த்தமுள்ள வெற்றியாகும்

### பாகிஸ்தான் பத்திரிகை தெரிவிப்பு

சிறுபான்மை தமிழ் மக்களுடனான நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொண்டால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்ற வெற்றி அர்த்தமுள்ளதாக அமையும் என பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் டோன் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தேர்தல் தொடர்பாக எழுதப்பட்டுள்ள அந்த ஆசிரிய தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஏறக்குறைய 70 வீதமான இலங்கை மக்களான 14 மில்லியன் வாக்காளர்களில் 57 சதவீதமானோர் தற்போதைய ஜனாதிபதிக்கே தமது வாக்குகளை அளித்துள்ளனர். இருந்த போதிலும் பிரதான எதிரணி ஜனாதிபதி போட்டியாளர் முடிவுகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார். அத்துடன் தேர்தல் கண்காணிப்பாளர்களில் சிலர் உத்தியோகபூர்வ வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன எனக் குறை கூறுகின்றனர். அது நிச்சயமாகாது. இரண்டு தசாப்த காலத்திற்கு மேலான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அரசாங்கத்திற்கு மக்கள் அளித்த அங்கீகாரமே தேர்தல் முடிவுகளின் உண்மையான பிரதிபலிப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## 152 நாட்களில் 107 வழக்குகளுக்குத் தீர்ப்பு முதல் நிலையில் திருமலை மேல் நீதிமன்றம்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டின் மூன்றாவது நீதிமன்ற தவணைக் காலத்தில் ஆவணி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையான 5 மாதங்களில் 107 வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கி திருகோணமலை மேல் நீதிமன்றத்தை நீதிபதி மா. இளஞ்செழியன் முதல் நிலைக்கு கொண்டு வந்துள்ளார் என சமூக நல ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

இதற்கமைய கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் வல்லுறவு வழக்குகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் விடுதலை ஆகியன வழங்கப்பட்டுள்ளன. 5 மாதங்களில் 107 வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதியாக இவர் 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் பதவியேற்ற பின்னர் 2009 மார்கழி மாதம் வரையான 11/2 வருட காலத்தில் 300 வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-6)

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எனது கருத்தைப் பலப்படுத்தவில்லையா?

### விநாயகமூர்த்தி முரளிதரன் துண்டுப் பிரசுரம்

(கொழும்பு)

எமது விசுவாசத்தையும் நட்பையும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் காட்டி இருப்போமானால் எமது தமிழ் மக்களின் நிலையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமையும் எங்கோ சென்றிருக்கும் என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் - முஸ்லிம் கிராமங்களில் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் 6ஆவது ஜனாதிபதியாக ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். இலங்கை மக்களின் அன்பும் ஆதரவும் உறுதிப்பட்டுத்தப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே உங்களிடம் ஆட்சியின் பங்காளியாக மாற வேண்டும் எனவும் சிங்கள மக்கள் தமது தலைவனாக மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை முடிவு செய்துவிட்டார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தேன். அது இன்று நடந்தேறவில்லையா? தேர்தல் முடிவுகள் எனது கருத்தைப் புலப்படுத்தவில்லையா?

எமக்குரிய கடமை ஜனாதிபதியைப் பலப்படுத்துவதுடன் எமது பிரதேச அபிவிருத்தியை, பொருளாதார அபிவிருத்தியை, நிம்மதியை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். எது எப்படி இருந்தாலும் ஜனாதிபதி எதிர்காலத்தில் தூரநோக்குப் பார்வையுடன் நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும்.

மேலும் தொடர்ந்து தவறுகள் செய்து மன்னிக்க முடியாத சமுதாயமாக நாம் இருக்காமல் எம்மை திருத்துவோம். அழைத்தவுடன் வரக்கூடிய நாம் சொல்வதை செய்யக் கூடிய நம்பிக்கையாக எம் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியவரை என்றும் எமது ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவை வைத்திருப்போம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## பிரகீத் ஹெக்நேலியகொட குறித்து எவ்வித தகவல்களும் இல்லை

### குடும்பத்தார் கவலை

(கொழும்பு)

கடந்த 24ஆம் திகதி இரவு காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட குறித்து இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லையென அவரது குடும்ப உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து காவல்துறைப் பேச்சாளர் ஐ.எம். கருணாரத்னவிடம் கேட்டபோது ஊடகவியலாளர் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவருக்கு இறுதியாகக் கிடைத்த தொலைபேசி அழைப்பின் ஊடாக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அத்துடன் இது குறித்து சகல காவல்துறை நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஹெக்நேலியகொட காணாமல் போனமை தொடர்பாக அவரது மனைவி ஹோமாகம காவல்துறையில் முறைப்பாடு செய்ய சென்றபோது காவல்துறையினர் அதனை ஏற்க மறுத்துள்ளனர்.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட வெள்ளை வேன் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு தவறுதலாக இடம்பெற்றதாகக் கூறி இடையில் இறக்கிவிடப்பட்டார்.

இவர் லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தில் அரசியல் கட்டுரைகள்ள எழுதி வந்ததுடன் சில காலம் சியரட்ட பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி வந்துள்ளார். (2-6)

## புலிகள் தயாரித்த எல்லாளன் சினிமாவை தமிழகத்தில் வெளியிட ஏற்பாடுகள் மும்முரம்

இலங்கை இராணுவம் விடுதலைப்புலிகள் இடையே பல ஆண்டுகளாக நடந்து வந்த போர் கடந்தாண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. அதற்கு முன்பு வரை இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசித்த முல்லைத்தீவு, கிளிநொச்சி, வன்னி உள்ளிட்ட பகுதிகளில் புலிகள் அமைப்பினர் நிர்வாகித்து வந்தனர்.

இராணுவத்திற்கு இணையாக அவர்களிடமும் நவீன ஆயுதங்களும், கப்பல் படை, விமானப் படை உள்ளிட்ட போர்ப் படைகளும் இருந்தன. குறிப்பாக தன்னையே அழித்துக் கொண்டு பெரும் சேதத்தையும், உயிரிழப்பையும் ஏற்படுத்தும் கரும்புலிகள் என்ற தற்கொலைப் படையும் புலிகள் அமைப்பில் இருந்தது.

இந்த கரும்புலிகள் மூலம் பல்வேறு முக்கிய தலைவர்களைத் தீர்த்துக் கட்டினர். அதேநேரத்தில் புலிகள் அமைப்பின் மீது இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்ததற்கும் இந்த கரும்புலி அமைப்பினர் தான் காரணம்.

அந்தளவிற்கு கரும்புலிகளின் செயல்கள் சர்ச்சைக்குரியதாக இருந்து வந்துள்ளது. அந்தக் கரும்புலிகளின் வாழ்க்கை முறை, மன உறுதி, போர் தந்திரம் உள்ளிட்டவற்றை வெளியுலகிற்கு விவரிக்கும் வகையில் சினிமா படம் தயாரித்து அதை உலகம் முழுவதும் வெளியிட புலிகள் அமைப்பினர் திட்டமிட்டனர். ஆனால் அதற்குள் போர் உச்சகட்டத்தை அடைந்து இலங்கை இராணுவத்திடம் புலிகள் அமைப்பு வீழ்ந்தது. இந்நிலையில் வெளிநாடுகளில் உள்ள புலி ஆதரவாளர்கள் புதிய முயற்சியில் இறங்கியுள்ளனர். வன்னியில் போரில் ஈடுபட்டிருந்த போது புலிகள் தயாரித்த எல்லாளன் என்ற சினிமாவை அவர்கள் வெளிநாடுகளில் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் படத்தில் 21 கரும்புலிகள் நடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் நான்கு கரும்புலிகள் படப்பிடிப்பு முடிவதற்கு முன்பே இராணுவத்திற்கு எதிரான போரில் தற்கொலைப் படை தாக்குதலை நிகழ்த்தி இறந்துவிட்டனர் என்றும் மற்றவர்கள் இறுதிக் கட்டப் போரில் இறந்துவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.


தாக்குதலுக்கு கரும்புலிகள் எவ்வாறு தயாராகின்றனர், அப்போது தங்களின் மனநிலையை எவ்வாறு தாக்குதலுக்காக ஒருங்கிணைத்து கொள்கின்றனர் என்னென்ன பயிற்சிகள் எடுக்கின்றனர் போன்றவற்றுடன் கரும்புலிகள் உயிர் இழக்கும் காட்சிகள் படத்தில் எடுக்கப்பட்டுள்ளதாம்.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் மற்ற நாடுகளில் இப்படத்தை திரையிடும் முயற்சியில் புலி ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பாக தமிழகத்தில் படத்தை வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. (2-6)

# அத்துமீறும் இலங்கை மீனவர்கள்; இந்திய அரசாங்கம் முறைப்பாடு

(சென்னை)

இலங்கை மீனவர்கள் இந்தியக்கடல் பகுதியில் சட்டவிரோதமாக மீன் பிடிப்பது தொடர்பான பிரச்சினையை இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாக இந்திய கரையோரக் காவல்துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.




இந்திய கரையோர காவல்துறையினர் கிழக்குப்பிராந்திய தளபதியான ராஜசேகர் இது குறித்து மேலும் கூறுகையில்,

2008ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த வருடம் இந்திய கடல்பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடித்தமையால் பறிமுதல் செய்யப்பட்ட இலங்கைப் படகுகளின் எண்ணிக்கை கடந்த வருடம் அதிகரித்திருந்தாக தெரிவித்தார்.

கடந்த வருடம் 116 படகுகள் இந்திய கடற்கரையில் பயணித்தமைக்காக இந்திய கரையோர காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீனவர்கள் அத்துமீறி இந் தியாவின் கடற்பரப்பில் மீன் பிடிக்கின்றனர். முக்கியமாக சென்னைக் கடற்பரப்பில் மீன்களை பிடிக்கின்றனர். இது குறித்து நாங்கள் கவலை அடைந்துள்ளோம். இப்பிரச்சினை குறித்து கரையோர காவல்துறையினர் இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இந்திய மத்திய அரசு இவ்விடயத்தை இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது என்று தெரிவித்தார்.

(2-6)



ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் கோதாவரி ஆற்றில் நடந்த படகு விபத்தில் பலியானோரை தேடும்பணி நடைபெற்றது.

# இலங்கைத் தமிழர்களுக்கு நிதிதிரட்ட தமிழ்த்திரையுலகத்தினர் கலைநிகழ்ச்சி

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உதவும் வகையில் நிதி திரட்ட தமிழ்த் திரையுலகத்தினர் முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காக சென்னை, மலேசியா, சிங்கப்பூரில் கலை நிகழ்ச்சிகளை நடத்தவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து திரையுலக வட்டாரங்கள் தகவல் தருகையில், இலங்கையில் தற்போது நலன்புரி நிலையங்களில் உள்ள ஏராளமான தமிழர்கள் தங்களது சொந்தப் பகுதிகளில் மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் ஆயிரக் கணக்கான மக்கள் வீடு, நிலங்கள் உள்ளிட்ட வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கின்றார் கள். இலங்கைத் தமிழர் புனர்வாழ்வுக்காக இந்திய அரசு நிதியுதவி செய்து வருகின்றது என்றாலும் தாய்த்தமிழகத்திலிருந்தும் உதவிகள் போய்ச் சேர வேண்டும் என்று தமிழுணர்வாளர்கள் விரும்புகிறார்கள்.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக தமிழ்த் திரையுலகத்தினர் நிதி திரட்ட முன் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ்த்திரையுலகம் சார்பில் எதிர்வரும் மே அல்லது யூன் மாதத் தொடக்கத்தில் இலங்கைத் தமிழர் நிதி திரட்டும் கலை நிகழ்வுகள் நடைபெறவுள் ளன.


முதற்கட்டமாக சென்னையில் பிரமாண்டமான கலை இரவு நிகழ்ச்சியைப் படைத்து நிதிதிரட்டுவதற்கு முடிபு செய்யப்பட்டிருப்பதாகவும் அதைத் தொடர்ந்து தமிழர்கள் அதிகம் வாழும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பான ஆலோசனையும் திட்டமும் முழுவடிவம் பெறவில்லை. தொடக்க நிலையில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தமிழக முதல் அமைச்சர் கருணாநிதியுடன் கலந்தாலோசித்த பின்னரே இது குறித்த இறுதி முடிபு எடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

மலேசியாவில் எதிர்வரும் மே மாதம் தமிழ்த் திரையுலகத்தினர் பங்கேற்கும் திரைப்பட விழா ஒன்று நடைபெறவுள்ள நிலையில் இலங்கைத் தமிழர்களுக்காக மற்றொரு கலை நிகழ்ச்சியை அங்கு நடத்துவது சரியாக இருக்குமா என்றும் தமிழ்த் திரையுலகத்தினர் ஆலோசித்து வருகிறார்கள். எனவே மலேசியாவுக்குப் பதில் டுபாயில் கலை நிகழ்ச்சி நடத்தலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை எனினும் திரையுலகத்தினர் கலை நிகழ்ச்சிகளைப் படைத்து நிதி திரட்டுவது இன்னும் பேச்சளவில்தான் உள்ளது. தமிழ்த்திரையுலகதில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் கலைஞர்கள் மட்டுமே தற்போது இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்கிறார்கள். இது தொடர்பாக நடிகர் சங்கத்திடம் முறைப்படி கோரிக்கை விடுக்கப்பட்டு நடிகர் சங்கம் முடிவெடுத்த பின்னரே இம்முயற்சிக்கு இறுதி வடிவம் கிடைக்கும் என்கிறார்கள் விவரமாறிந்தவர்கள். கார்கில் யுத்தம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின்போது தமிழ்த் திரையுலகத்தினர் கலை நிகழ்ச்சிகளைப் படைத்து கோடிக் கணக்கில் நிதி திரட்டியது குறிப்பிடத்தக்கது. (2-6)

# புதிய இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை வருகை



தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள சிவ்சங்கர் மேனன் விரைவில் கொழும்பு வரவுள்ளதாக புதுடில்லி அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதை அடுத்து புதிய ஆலோசகராக சிவ்சங்கர் மேனன் நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையே ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ள நிலையில் சிவ்சங்கர் மேனனின் கொழும்பு வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அவரது கொழும்பு பயணத்தின்போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதுடன் நலன்புரி நிலையங்களில் உள்ள தமிழர்களை மீள்குடியேற்றுவது அவர்களுக்கான புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளை வேகப்படுத்துவது குறித்தும் முக்கிய ஆலோசனையில் ஈடுபடுவார் என்று கூறப்படுகிறது.மேலும் மேனனின் வருகையை அடுத்து இலங்கையிலிருந்து முக்கிய அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று புதுடில்லி சென்று அடுத்தகட்ட ஆலோசனைகளில் ஈடுபடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(2-6)

# மெட்ராஸ் உயர் நீதிமன்றம் சென்னை உயர் நீதிமன்றமாகிறது

## கருணாநிதி வலியுறுத்தலின் எதிரொலி

(சென்னை)

முதல் அமைச்சர் கருணாநிதி வற்புறுத்தலை தொடர்ந்து மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என்ற பெயரை சென்னை உயர் நீதிமன்றம் என்று மாற்றம் செய்வது பற்றி மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. விரைவில் இதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மெட்ராஸ் ஸ்டேட் என்று அழைக்கப்பட்டதை தமிழ்நாடு மாநிலம் என்று அண்ணா பெயர் மாற்றம் செய்தார். அதுபோல மெட்ராஸ் என்ற பெயரை சென்னை என்று பெயர் மாற்றம் செய்ய முதல் அமைச்சர் கருணாநிதி சட்டம் கொண்டு வந்தார். அதன்படி சென்னை என்ற பெயரில் அனைத்து நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. ஆனால் உயர் நீதிமன்றம் மட்டும் மெட்ராஸ் உயர் நீதிமன்றம் என்ற பெயரிலே இயங்குகிறது. மெட்ராஸ் என்ற பெயர் சென்னை என்று முழுமையாக மாற்றம்செய்யப்பட்ட பிறகு சென்னை உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்பட வேண்டும் என்பதில் முதல் அமைச்சர் கருணாநிதி கண்ணும் கருத்துமாக உள்ளார். இதையொட்டி மத்திய அரசை அவர் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்.

இந்த நிலையில் இந்த பெயர் மாற்றம் செய்வது தீவிர பரிசீலனையில் இருப்பதாக மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை தெரிவித்து உள்ளது. தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் இது குறித்தும் இதே போல பம்பாய் உயர் நீதிமன்றம் என்ற பெயரை மும்பை உயர்நீதிமன்றம் என்றும் கல்கத்தா நீதிமன்றம் என்ற பெயரை கொல்கத்தா உயர் நீதிமன்றம் என்றும் கவுகாத்தி என்ற பெயரை குவகாத்தி என்றும் பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுவான நடைமுறை என்னவென்றால் உயர் நீதிமன்றங்களின் பெயரை மாற்றம் செய்யும்போது அந்தந்த மாநில அரசுகளுக்கு கருத்துரு அனுப்ப வேண்டும். அது குறித்து மாநில அரசுகள் ஆலோசனை செய்து அதற்கான கருத்துருவை அந்தந்த நீதிமன்றங்களுக்கு அனுப்ப வேண்டும். அந்த கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதன் பிறகு நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.

மெட்ராஸ் என்ற வார்த்தையை சென்னை என்று பெயர் மாற்றம் செய்வற்காக தமிழக சட்டசபையில் 1996ஆம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் திகதி சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம் என அழைக்கப்படுகிறது. இந்த சட்டத்தின்படி மெட்ராஸ் என்ற சொல்லுக்கு பதிலாக சென்னை என்னும் சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

தொன்றுதொட்டே மெட்ராஸ் மாநகர் அடங்கியிருக்கின்ற பரப்பிடம் தமிழில் சென்னை என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. பல்வேறுபட்ட மக்களால் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. இந்த பெயரானது ஒரு முகமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்னை என எல்லோராலும் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை கருத்தில் கொண்டும் மெட்ராஸ் மாநகரத்தின் சரித்திர சமூக பண்பாட்டு வகையிலான விவரங்களையும் பிற விவரங்களையும் சட்ட கருத்தில் கொண்டும் பிற மொழிகளில் இதுநாள்வரை மெட்ராஸ் என்றும் மதராஸ் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இனிமேல் இந்நாள் (31.08.1996) முதல் சென்னை என அனைத்து மொழிகளிலுமே அழைக்கப்படும் என்று அந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

எங்கெல்கெல்லாம் மெட்ராஸ் என்ற பெயர் இருக்கிறதோ அவை எல்லாம் சென்னை என்று பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என் பதே இந்த சட்டத்தின் சாராம்சமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# உலகத் தமிழர் மாநாடு குறித்த கிருஷ்ணசுவாமியின் மனுவை மறுபரிசீலனை செய்ய உத்தரவு

(சென்னை)

உயர் நீதிமன்றம் கோவையில் பெப்ரவரி 6,7 ஆம் திகதிகளில் உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டை நடத்த புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசுவாமி திட்டமிட்டுள்ளார். இந்த மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி கேட்டு கோவை பொலிஸ் கமிஷனர் மற்றும் துணை கமிஷனர் ஆகியோரிடம் டாக்டர் கிருஷ்ணசுவாமி விண்ணப்பித் தார்.

ஆனால் அந்த விண்ணப்பத்தின் மீது உரிய பதிலை கமிஷனர் மற்றும் துணை கமிஷனர் அளிக்கவில்லை.எனவே மாநாடு நடத்த அனுமதி அளிக்க பொலிஸாருக்கு உத்தர விட வேண்டும் என்று உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார்.

அவருடைய மனுவை நீதிபதி கே.வெங்கட்ராமன் விசாரித்தார். கிருஷ்ணசுவாமி தரப்பில் வக்கீல் எஸ்.பிரபாகரன் ஆஜரானார். கிருஷ்ணசுவாமி மனு மீது நீதிபதி பிறப்பித்த உத்தரவு வருமாறு,

மாநாட்டுக்கு அனுமதி கேட்டு கிருஷ்ணசுவாமி கொடுத்திருந்த விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து துணை கமிஷனர் கடந்த 19 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தார். ஆனால், அதற்கு முன்பு மனுதாரர் தரப்பில் தகுந்த விளக்கம் கொடுப்பதற்கான வாய்ப்பை அவர் தரவில்லை என்று தெரிகிறது. எனவே துணை கமிஷனர் 19 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவு இரத்துச் செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பில் மீண்டும் இன்று மதியம் 12 மணிக்குள் விண்ணப்பிக்க அனுமதி தரப்படுகிறது.மாநாடு தொடர்பாக உரியவிளக்கங்கள் கேட்பதற்கும் ஆவணங்களைக் கொடுப்பதற்கும் துணை கமிஷனர் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதன் பிறகு தகுந்த ஆலோசனை நடத்தி இந்த மாநாட்டுக்கு அனுமதி கொடுப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும். 3ஆம் திகதிக் குள் மனுதாரரின் விண் ணப்பத்தின் மீது துணை கமிஷனர் முடிவு செய்து அறி விக்க வேண்டும். அதுபோல் கோவை பொலிஸ் கமிஷனருக்கும் இந்த உத்தரவு பொருந்தும். அவரும் நீதிமன்றம் பிறப் பித்துள்ள இந்த உத்தரவை தேவையானால் பின்பற்றலாம் என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார். (2-6)

# எழில் இழந்த தனங்கிளப்பு - மறவன்புலோ

# மீண்டும் வளம் கொழிக்குமா?


யாழ்ப்பாணத்தின் கிழக்கே அமைந்த அழகிய தென்மராட்சிப் பகுதியின் தெற்குப் பக்கமாக கண்டி வீதியையும் அதனை அடுத்து வரும் புகையிரத வீதியையும் கடந்து, அகன்று விரிந்த கடல்



நீர் ஏரிகளையும் குளங்களையும் பரந்த வயல் வெளிகளையும் பனை, தென்னை, முதலிய வான் உயர்ந்த மரங்களையும் வெளிநாட்டு பறவைகளையும் மையம் கொள்ள வைக்கும் ஓர் அழகிய பிரதேசமே தனங்கிளப்பு மறவன்புலோ.

12.12.1999இல் ஏற்பட்ட எதிர்பாராத அனர்த்தத்தால் மக்கள் யாவரும் ஒரே நாளில் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் தனங்கிளப்பு-மறவன்புலோ பகுதியை



சேர்ந்த 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்த குடும்பங்கள் 10 வருடங்களுக்கு பின்னர் தமது பிரதேசத்துக்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சியான விடயமாகும்.

பத்துவருட இடைவெளியில் இப்பிரதேசத்தில் காணப்பட்ட பனை,தென்னை உள்ளிட்ட பயன்தரக்கூடி மரங்கள் அழிந்து போயின.

இப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையே பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களை விட வயல் நிலம் மிக பெரிய பகுதியை கொண்டுள்ளது.

ஏறக்குறைய 2500 ஏக்கர் நில பரப்பினை கொண்டுள்ள இவ்வயல் பரப்பில் விளையும் நெல் யாழ்.மாவட்டத்தின் எல்லா மக்களினதும் அரிசித்தேவையை 6 மாத காலத்துக்கு பூர்த்தி செய்யக்கூடிய தென்பது ஆச்சரியமான உண்மை.

இப்பிரதேசத்தில் 10 வருடத்துக்குப் பின்னர் இம் முறை நெல் செய்கை இடம் பெற்றுள்ளது. இவ்வருடம் அதிக நெல்லினை உற்பத்தி செய்ய முடியும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வளமிக்க இப்பிரதேசத்தில் பெரும் போகப் பயிர் நடவடிக்கை மட்டுமே இடம்பெற்று வந்தது.


எனினும் இங்கு சிறுபோக நடவடிக்கை மேற்கொள்ளும் வாய்ப்பும் உண்டு.அதாவது சிறுதானிய பயிர்ச்செய்கை செய்யக்கூடியவாறு உள்ளது.

இதற்கு இப்பகுதியில் உள்ள குளங்கள் ,வாய்க்கால்கள் என்பனவற்றை

## ஊர்த் தரிசனம்

புனரமைக்க வேண்டியதேவையுண்டு.

எனவே இதனை புனரமைக்க அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள்



முன் வரவேண்டும் என இப்பகுதிமக்கள் வேண்டி நிற்கின்றன.

எனவே இவ் வளமிக்க பிரதேசத்தினை மேம்படுத்தி மக்களின் வாக்கைத்தரத்தினை உயர்த்த உரிய தரப்புகள் முன்வரவேண்டும்.

மேலும் இப்பகுதி மக்களின் குடியிருப்புக்கள் அனைத்தும் சேதமடைந்துவிட்டன.

இதனை மீளக் கட்டிக்கொடுக்க அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் முன் வந்து இப்பகுதி மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது காலத்தின் கட்டாயதேவையாகும்.

அதேநேரம் இப்பிரதேசத்தில் உள்ள இரு பாடசாலைகளும் , பாலர் பாடசாலைகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இதனையும் புனரமைப்புச் செய்து இப்பகுதி மாணவர்களின் கல்வியை முன்னெடுக்க ஆவன செய்ய வேண்டும்.

மறவன்புலோ-தனங்கிளப்பின் எழுச்சியில் பங்கேற்ற பொதுக்கட்டடங்கள்,தங்கள் இருப்பை இழந்து நிற்கும் பரிதாப நிலைக்கு பிராயச்சித்தம் செய்வதும் தேவையான விடயமே .

அத்துடன் சுகாதாரா நடவடிக்கை - போக்குவரத்துப்பாதைகள் - மின்சார வசதிகள் உள்ளிட்ட உட்கட்டுமாணப்பணிகளையும் ஏற்படுத்தி வளமிக்க இப்பிரதேசத்தின் மீள் உருவாக்கத்திற்கு உரிய தரப்புக்கள் முன் வரவேண்டும் என இப்பகுதி மக்கள் காத்திருக்கின்றனர்.

1999ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின் போது

எஸ். ரி. விமல்

இப்பகுதி மக்களினால் கைவிடப்பட்ட 10ஆயிரத் திற்கும் மேற்பட்ட மாடுகளை மக்களுக்கு பங்கிட்டு வழங்குவதற்கும் உரிய தரப்புக்கள் முயற்சிப்புடன் வளமிக்க இவ் விவசாயப் பிரதேசத்தில் நெல் களஞ்சியம் அமைத்தும் பாற்பண்ணை ஒன்று உருவாக்கியும் தரப்படுமாயின் யாழ். மண்ணில் விவசாயம் மீண்டும் எழுச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆடுகளின் ஒற்றுமை- சிங்கத்தைப் பட்டினியாக படுத்திருக்கச் செய்கிறது.

*- ஸான்ஸிபார்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## செல்வம் அடைக்கலநாதனின் தவறான மதிப்பீடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் நிரூபித்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் செல்வம் அடைக்கலநாதன் மீது தமிழ் மக்கள் மரியாதை வைத்துள்ளனர்.

பல சந்தர்ப்பங்களில் அவர் நியாயத்தை உரத்த குரலில் கூறியுள்ளார். அதேநேரம் யதார்த்தத்தையும் புரிந்து கொண்டவர்.

இருந்தும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக- ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை நிரூபிப்பதாக அவர் கூறியிருப்பது பெரும் தவறாகும். அந்தத் தவறை அவர் திருத்திக் கொள்ளுவார் என்ற நம்பிக்கை உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுப்பதற்கு முன்னதாகவே, தமிழ் ம்க்கள் முடிபெடுத்துவிட்டனர்.

தமிழ் மக்கள் எடுத்த முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்ததென்றே கூறவேண்டும். இருந்தும் தமிழ் மக்களிடம் இருந்த ஒற்றுமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபை எடுப்பதில் பத்துக்கு எட்டு என்ற விகிதாசாரம் கூட்டமைப்பில் இருந்தது.

ஆக, குறித்த ஒரு முடிபில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுப்பதில் கூட, ஒற்றுமைப்பட முடியாத கூட்டமைப்பின் வழி நடத்தலை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என நினைப்பது மகா தவறு.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்குக் கிழக்கு முடிபு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆய்வு செய்வதாக இருந்தால்,

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு- கட்சி பேதம் மறந்து- தத்தம் விருப்புக்குரிய அரசியல்வாதிகளின் உத்தரவாதங்களை ஒதுக்கிவிட்டு வாக்களித்தார்கள்.

எனவே ஜனாதிபதித் தேர்தலின் முடிபு தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையை வலியுறுத்துவதாகவே அமைகின்றது.

தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டால்- ஓரணியில் திரண்டால், சிறுபான்மை மக்களாலும் சாதிக்க முடியும் என்பதே தேர்தல் தரும் முடிபு.

இதை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் நிரூபிக்கப்பட்டுள்ளதென்ற நினைப்பு ஆபத்தானது. அது மீண்டும் ஒற்றுமையை குலைக்கக் கூடியது.

இங்கு முன்வைக்கப்படும் இக் கருத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரானதல்ல. மாறாக தயவு செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மறுசீரமையுங்கள் என்று கேட்கின்றோம்.

தமிழ்த் தலைமைகளை, சிங்களத் தலைமைகள் கௌரவிக்க வேண்டுமாயின் முதலில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு ஓரணியில் திரள வேண்டும். இதனையே தேர்தல் முடிபு சொல்லி நிற்கின்றது.

# வடக்கு- கிழக்கு அபிவிருத்தி பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்!

## பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் உதவுமென்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சிலர் தமது அரசியல் இலாபத்திற்காக வடக்கு- கிழக்கு மக்களைத் தவறாக வழிநடத்திய காரணத்திற்காக அவர்களின் அபிவிருத்தியைக் கைவிடமுடியாது எனப் பிரதமர் கூறினார்.

பொறுப்புவாய்ந்த ஓர் அரசாங்கம் என்ற வகையில் வடக்கு- கிழக்கு மக்களும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குச் சமமானவர்களென மதித்துச் செயற்படவேண்டும் .அவர்கள் வாக்களித்தது பற்றிப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு உதவுகின்றோம்.

புலிகளின் பிடியிலிருந்து அவர்களை மீட்டெடுத்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தற்போது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருப்பது வாக்குகளுக்காக அல்ல. அது எமது கடமையும் பொறுப்புமாகுமென்று பிரதமர் குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு செயற்றிட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பிரதமர் தற்போது யுத்தம் முடிவடைந்து அபிவிருத்திக்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சமாதானம் இல்லாமல் எந்த அபிவிருத்தியையும் அடைய முடியாது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே ஜனாதிபதி நாட்டு மக்களிடம் ஆணை கோரினார். இரண்டாவது தடவையில் அபிவிருத்திக்கே அவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.



அடுத்த நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தல் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாகும். பொதுத்தேர்தலில் மக்கள் எமக்குத் தெளிவான ஆணையை வழங்க வேண்டுமென்பதற்காக பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நாம் எதிர் பார்க்கின்றோம். ஜனாதிபதி தேர்தலிலும் பார்க்க மக்களிடமிருந்து கூடுதலான ஆதரவை நாம் எதிர்பார்க்கின்றோம். கட்சி நிற பேதங்களுக்கு அப்பாலான ஆதரவை நல்க வேண்டும்.

அதனால்தான் பழையதை மறந்து விட்டு நாட்டை முன்னேற்ற அனைவரும் ஒன்றுபடுவோம் என ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இதுவே இன்றைய காலத்தின் தேவையாகும் என்றும் கூறினார். (2-6)

### முகாம்களில் உள்ள மக்களை

# மீள்குடியேற்றும் நடவடிக்கை நாளை ஆரம்பமாகவுள்ளது

(கொழும்பு)

வவுனியா நிவாரணக்கிராமங்களில் உள்ள மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கை நாளை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிக்கின்றது.

ஜனாதிபதி தேர்தல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யும் நோக்கத்துடன் மீள்குடியேற்ற அமைச்சின் நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததாக அமைச்சின் செயலாளர் யூ.எஸ்.எம். ஹால்டீன் தெரிவித்தார்.

தற்போது நிவாரணக் கிராமங்களில் 98 ஆயிரம் பேர் வரையில் தங்கியுள்ளனர்.

நாளை ஆரம்பமாகவுள்ள மீள்குடியேற்றச் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக கிளிநொச்சி பிரதேசத்தில் இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

அத்துடன் மீள்குடியேற்றப்படும் சகல குடும்பங்களுக்கும் ஐந்தாயிரம் ரூபா வீதம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி 6 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களுடன் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் ஜனநாயகம் பின்னோக்கிச் செல்கின்றது

## அநுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக ஜனநாயகம் பின்னோக்கிச் செல்வதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பி.யின் தலைமைக்காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

அரசாங்கம் செயற்படும் விதத்திலிருந்து இது தெளிவாக விளங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்திற்கெதிரான முறையில் பத்திரிகை காரியாலயம் மற்றும் அதனூடான அச்சகம் என்பவற்றுக்குச் சீல் வைத்தமை குறித்தும் ஜே.வி.பி. தனது கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த ஜனநாயகத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்கெதிராக ஜே.வி.பி. சட்ட பூர்வமான செயற்பாட்டை மேற்கொள்ளத் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



தனது குழந்தைகளில் யாரேனும் ஒருவருக்காவது உதவி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் அதன் மூலம் நீ பாக்கியம் பெற்றவன் ஆகிறாய். ஆனால் அது காரணமாக உன்னைப்பற்றி நீ மிகவும் பெருமையாக நினைத்துக்கொள்ளாதே. மற்றவர்களுக்குக் கிடைக்காத இந்த அரிய வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது.

இதனால் நீ பாக்கியசாலி ஆகிறாய். எனவே நீ செய்யும் இந்தச் சேவையைக் கடவுள் வழிபாடாகவே செய். ஆண்டவனுக்கு உதவுதற்காக என்று இல்லாமல் அவருக்காகப் பணியாற்றும் பேறு பெற்ற நாம் பாக்கியசாலிகள் ஆவோம். ***உதவி*** என்ற சொல்லை உனது உள்ளத்திலிருந்தே விக்கிவிடு. நீ உதவி செய்ய முடியாது. அப்படி நீ நினைப்பது தான் தெய்வ நிந்தனையாகும். அவருடைய விருப்பத்தினால்தான் நீ இங்கு இருக்கிறாய். நீ அவருக்கு உதவி செய்வதாகவா சொல்கிறாய் ? இல்லை உன்னால் அவரை வழிபடத்தான் முடியும். நீ ஒரு நாய்க்கு ஒரு பிடி சோறு கொடுக்கும்போது அந்த நாயைக் கடவுளாகவே பாவித்து வழிபடு. அந்த நாயினுள்ளே கடவுள் இருக்கிறார். அவரே எல்லாமுமாய் இருக்கிறார் ; எல்லாவற்றிலும் இருக்கிறார்.

# தமிழ் மக்களை பலவீனமான நிலைக்கு — தள்ளிய ஜனாதிபதித் தேர்தல் —

(கொழும்பு)

நடந்து முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தல் தமிழ் பேசும் மக்களை அரசியல் ரீதியாக பலவீனமானதொரு நிலைக்கு தள்ளியுள்ளது என்று தமிழ் பேசும் மக்களின் சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான அமைப்பு தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாத, மக்களுடன் தொடர்பில்லாத, அரசியல் பார்வையும் மதிநுட்பம் அற்ற, அரசியல் தீர்மானமும் சிறுபான்மை மக்களுடைய அரசியல் பெறுமானத்தை செல்லாக் காசாக்கியுள்ளது. ஏற்கனவே பாதிப்புக்களையும், அவலங்களையும் சந்தித்திருக்கும்இந்த மக்களுடைய அரசியல் முன்னெடுப்புக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

இன்று தாங்க முடியாத நாளாந்த வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து மீளும் வழியற்று திணறிக்கொண்டிருக்கும் இந்த மக்கள் இன்னமும் தமது மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, தடுத்துவைக்கப்பட்ட தமது பிள்ளைகளின் விடுதலை, பாதிக்கப்பட்ட, பிரதேசங்களின் அபிவிருத்தி, கடற்தொழில் தடை, விவசாய நிலங்கள் மீதான தடை, உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றல் உள்ளிட்ட நாளாந்த வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான தேவை மிக முக்கியமான விடயங்களாகிவிட்டன. தமிழ் மக்களின் பிரச்சினை என்பது தனித்து அரசியல் பிரச்சினை மட்டும்தான் என்பதல்ல.

தமிழ் பேசும் அரசியல் அணுகுமுறைகள் முற்றிலும் புதிய பாதையை மிக நுட்பமாகவும், கவனத்துடனும் கையாளப்பட வேண்டியது மிக அவசியம்.

கடந்த காலங்களைப் போல வெற்று வார்த்தைகள் உணர்ச்சியைத் தூண்டும் கோசங்கள் என்பவற்றுக்கு அப்பால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைக் கடந்து அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம் என்பதை சகலரும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தை ஆதரிப் பது அல்லது எதிர்ப்பது என்பதல்ல பிரச்சினை. மக்களின் நலன்களை எவ்வாறு பாதுகாத் துக்கொள்ளப் போகின்றோம் என்பதே இங்கே முக்கியமானது.

எனவே அரசியல் கட்சிகள் தேர்தல்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுப்பதற்கு முன் சமூக அமைப்புகள், மக்கள் அமைப்புக்களுடன் பேசி அவர்களின் கருத்துக்ளையும் உள்வாங்கி தமது சுயநலம், தன்முனைப்பு என்பவற்றினைக் கடந்து மக்கள் நலன்களையும் முதன்மைப்படுத்தி ஜனநாயக ரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பிரபாகரன் மரணச் சான்றிதழ் இன்னும் கிடைக்கவில்லை — சி.பி.ஐ.

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருந்தார். அவர் கடைசி வரை கைது செய்யப்படவில்லை. தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். இந்த நிலையில் கடந்த மே மாதம் இலங்கை இராணுவத்துடன் நடந்த சண்டையில் பிரபாகரன் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவரது உடலையும் காட்டினார்கள். ஆனால் ஒரு தரப்பினர் பிரபாகரன் சாகவில்லை. இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று கூறி வருகின்றனர்.

பிரபாகரன் இறந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்ததால் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரித்து வரும் சி.பி.ஐ. அவருடைய மரண சான்றிதழை இலங்கை அரசிடம் கேட்டது.இலங்கை அரசு பிரபாகரன் மரணச் சான்றிதழை இந்திய அரசிடம் ஒப்படைத்து விட்டதாக தகவல்கள் வெளியாயின. ஆனால் இந்திய அரசு தரப்பில் இது உறுதி செய்யப்படாமலேயே இருந்தது.

இதுபற்றி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சி.பி.ஐ.யிடம் கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. ராஜீவ்காந்தி கொலை வழக்கு தற்போது என்ன நிலையில் இருக்கிறது என்ற விபரத்தை முழுமையாகத் தெரிவிக்கும்படி அதில் கூறியிருந்தனர்.

இதற்கு சி.பி.ஐ. சூப்பிரண்டு பி. என். மிஸ்ரா பதில் அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது,

பிரபாகரன் இறந்ததாக தகவல் வந்ததை அடுத்து உரிய வழிகளில் இலங்கைக்குத் தகவல் அனுப்பி அவருடைய இறப்புச் சான்றிதழை கேட்டோம். இந்திய வெளியுறவுத் துறை மூலம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இதுவரை பிரபாகரன் மரணச் சான்றிதழை இலங்கை அரசு தரவில்லை. இதற்காக இன்று வரை காத்திருக்கிறோம். மரண சான்றிதழைப் பெறுவதற்கு அதற்குரிய வழிமுறைகளின்படி தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த தடா கோர்ட்டில் அனுமதி பெற்று தேவையான விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம். இதில் மரண தண்டனை பெற்ற பேரறிவாளன், சுதந்திரராஜா, ஸ்ரீஹரன், ஆயுள் தண்டனை பெற்ற நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோர் வேலூர் சிறையில் உள்ளனர். மற்ற குற்றவாளிகள் ரவிச்சந்திரா, பிரகாசம் ஆகியோர் மதுரை சிறையிலும் உள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (2-6)

# இலங்கை தமிழர் விவகாரம் குறித்து சிவ்சங்கர் மேனன் - கருணாநிதி ஆலோசனை

தமிழக முதல்வர் கருணாநிதியை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் சென்னையில் நேற்று சந்தித்தார்.

கருணாநிதியைச் சந்தித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய சிவ்சங்கர் மேனன் இலங்கையில் இடம் பெயர்ந்த தமிழர்களை மறுகுடியமர்த்த அந்நாட்டு அரசுடன் இந்தியா இணைந்து பணியாற்றி வருகிறது என்றார்.

இவ்விவகாரம் தொடர்பாக மத்திய அரசால் என்ன செய்ய முடியுமோ அதைத் தொடர்ந்து செய்வோம் என கருணாநிதியிடம் உறுதியளித்ததாக அவர் தெரிவித்தார்.

கருணாநிதியை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து பல்வேறு விவாகரங்கள்குறித்து ஆலோசனை நடத்தியதாக மேனன் கூறினார். இந்திய மீனவர்கள் இலங்கை அரசால் நடத்தப்படும் விதம் குறித்து கருணாநிதி அப்போது கவலை தெரிவித்தார் என்று அவர் தெரிவித்துள்ளார். (2-6)



# மஹாத்மா காந்தி அஸ்தி கரைக்கப்பட்டது

இந்திய தேசப்பிதா மஹாத்மா காந்தியுடைய அஸ்தியின் ஒரு பாகம் சனிக்கிழமையன்று தென்னாபிரிக்கக் கடலில் கரைக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளின் 62ஆவது நினைவு தினமான சனிக்கிழமையன்று டர்பன் அருகே அஸ்தி கரைப்பு வைபவம் நடந்துள்ளது.

அர்ச்சகர் ஒருவர் மந்திரங்களை ஓத கடலில் மலர்கள் தூவப்பட்டு நடந்த இந்த வைபவத்தில் இருநூறு பேர் வரையிலானோர் கலந்து கொண்டிருந்தனர். 1948இல் காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அவரது அஸ்தி பல கலசங்களில் பகிர்ந்து அடைக்கப்பட்டு பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

அவ்வாறு தென்னாபிரிக்கா அனுப்பப்பட்ட அஸ்தியின் ஒரு பகுதி குடும்ப நண்பர் ஒருவரால் இவ்வளவு காலமும் பாதுகாக்கப்பட்டிருந்தது என்று காந்தியின் பேத்தி இலா காந்தி தெளிவுபடுத்தியிருந்தார். (2-6)

# புலிகளின் முக்கிய உறுப்பினர் —கொழும்பில் கைதானார்—

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவர் என கருதப்படும் சுப்ரமணியம் சிவகுமார் அல்லது மலேசியா ராஜன் என்பவர் கொழும்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் வசித்து வந்த இவர் காவற்துறையினரால் தேடப்பட்டதை தொடர்ந்து 1991ஆம் ஆண்டு இரகசியமாக வெளிநாடு சென்றுள்ளார். இதன் பின்னர் வெளிநாட்டில் இருந்தவாறு கடந்த 2001 ஆம் ஆண்டு வரை புலிகளின் சர்வதேச வலைப் பின்னலில் பணியாற்றி வந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கையை அடுத்து நாடு திரும்ப சிவகுமார் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்துள்ளதுடன் சில தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக காவற்றுறை அதிகாரி குறிப்பிட்டுள்ளதாக தெரிகிறது.

எனினும் மலேசியா ராஜன் சர்வதேச புலனாய்வு வலைப்பின்னலின் உதவியுடன் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு கொழும்பு செல்லப்பட்டதாக சில தகவல் கள் கூறுகின்றன.

இந்த தகவல்கள் இடையே புலிகளின் தோல்விக்குப் பின் கே.பியுடன் இணைந்து வேலை செய்தவர் எனவும் அவர் திட்டமிட்டு அனுப்பப்பட்டவர் எனவும் இப்போது அவரை அரச புலனாய்வுத்துறை அழைத்துச் சென்றுள் ளதாக பிறிதொரு தகவலும் தெரிவிக்கின்றது.

எது எவ்வாறாயினும் இந்தத் தகவல்கள் எதுவும் ஆதாரபூர்வமானவையாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# சிறுதோட்ட தொழிலாளருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்தத்தினால் வழங்கப்படும் சம்பள உயர்வை ஏனைய சிறுதேயிலை, இறப்பர் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான 2500 ரூபாய் சம்பள உயர்வுக்கு சமனான விதத்தில் தனியார் துறை ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தொழில் அமைச்சரின் பணிப்புரைகளுக்கமைய இந்த நடவடிக்கையை தொழில் ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் நாளாந்த சம்பளமாக 405 ரூபாய் வழங்கப்படுகிறது.

ஆனால் 25 ஏக்கருக்கும் அதிகமான தோட்டங்களில் பயனாற்றும் தொழிலாளர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு உரித்துடையதாக இருக்கவில்லை. எனவே சிறு தோட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக் கும் 405 ரூபாய் சம்பளம் வழங்கும் வகை யில் கடந்த வாரம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாக தொழில் ஆணையாளர் நாயகம் டபிள்யு .ஜே.எல்.யு.விஜயவீர தெரிவித்தார். (2-

# ஹெய்ட்டி பூகம்பம்; நாசா ஆய்வு

ஹெய்ட்டியில் வரலாறு காணாத கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதில் 2 இலட்சம் பேர் பலியானார்கள்.

கருமையான பூகம்பம் ஏற்பட்டது. ஏன்? என்று ஆய்வு நடத்த அமெரிக்காவின் விண்வெளி மையமான நாசா முடிபு செய்துள்ளது.

இதற்காக நாசா நிறுவனம் ஹெய்ட்டி அருகேயுள்ள ஹில்பேனியோலா நாட்டுக்கு அதி நவீன விமானங்களை அனுப்பியுள்ளது. இந்த விமானத்தில் உள்ள ராடர் கருவிகள் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. (2-6)

### வளரும் நாடுகளில்

# மருந்து பற்றாக்குறை; சமாளிக்க பில்கேட்ஸ் பண உதவி

2020 ஆண்டுக்குள் வளரும் நாடுகளில் மருந்துகள் பற்றாக்குறையை சீராக்க சாப்ட்வேர் நிபுணர் பில்கேட்ஸ் 10 பில்லியன் அமெரிக்கா டொலர்கள் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.இதற்காக தனிக்குழு ஒன்று அமைக்கவும் பில்கேட்ஸ் திட்டமிட்டுள்ளார்.

இக்குழுவில் 43 பேர் இடம்பெற்றுள்ளனர். மருந்துகளின் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சிக்காக தாவோஸில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டிற்கும் 10 பில்லியன் அமெரிக்க டாலர்களையும் பில்கேட்ஸ் மெலிண்டா தம்பதியினர் வழங்கியுள்ளனர். (2-6)




சிறுப்பிட்டி வடக்கு
ஸ்ரீ விஷ்ணு துர்க்காதேவி ஆலயம்
அலங்கார உற்சவம்



ஆரம்பம் –01.02.2010 திங்கள் பகல் 10 மணி
சப்பறத்திருவிழா –09.02.2010 செவ்வாய் பகல் 12 மணி
தேர்த்திருவிழா –10.02.2010 புதன் பகல் 10 மணி
தீர்த்தத் திருவிழாவும் சங்காபிஷேகமும்
–11.02.2010 வியாழன் பகல் 10 மணி

பிரதமகுரு –சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்
நித்தியபூசை – இரத்தின பரமேஸ்வர ஐயா

கா.நடராசா
ஆலய தர்மகர்த்தா

அனுசரணை
காந்தன் பந்தல்
சிறுப்பிட்டி புத்தூர்

(C-4368)

# பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் தொடரையும் அவுஸ்திரேலியா முழுமையாகக் கைப்பற்றியது



(பேர்த்)

மைக்கேயின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரை 5:0 என்ற கணக்கில் கைப்பற்றி வெள்ளையடித்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து நடைபெற்ற முதல் நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை 4:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் 5 ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று பேர்த்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவர் மொகமெட் யூசுப் விளையாடாததால் சகிட் அப்ரிடி தலைமை பொறுப்பை ஏற்றார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் 8.5 ஓவர்களில் 16 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

இதில் சல்மான்பட், ஹாலிட் லத்திப் ஆகியோர். பூச்சியத்துடனும் யூனிஸ்கான் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர் எனினும் தொடர்ந்து களமிறங்கிய சொகைப் மலிக், உமர் அக்மல், பாவட் அலாம் ஆகியோர் பிரகாசிக்க பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது.

இதில் உமர் அக்மல் 102 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் பாவட் அலாம் 70 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 63 ஓட்டங்களையும் சொகைப்மலிக் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்கேய் 9.3 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 35 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் 3, ஜோன்ஸன் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றி வெள்ளையடித்தது.

அத்துடன் 25 ஆண்டுகளின்பின் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாகக் சுவீகரித்துள்ளது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த மைக்கேய் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் அவ் அணியின் ஹரிஸ் தொடர் நாயகன் விருதை வென்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி பொன்டிங், ஹசியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 49.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 213 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



இதில் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 55 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் மார்ஷ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நவீட் உல்ஹசன், சகிட் அப்ரிடி, சொகைப் மலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஆசிப், அஜ்ஜும் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

## கலப்பு இரட்டையர் பிரிவில் பயஸ்-பிளாக் ஜோடி வெற்றி

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சிம்பாவேயின் காரா பிளாக் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடந்தது. நேற்றுமுன்தினம் நடந்த கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சிம்பாவேயின் காரா பிளாக் ஜோடி, ரஷ்யாவின் எகாடரினா, செக் குடியரசின் ஐராஸ்லோவ் ஜோடியை எதிர்கொண்டது. விறுவிறுப்பான போட்டியின் முதல் செட்டை பயஸ் ஜோடி 7-5 என கைப்பற்றியது.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பயஸ் ஜோடி இரண்டாவது செட்டை 6-3 என மிகச் சுலபமாக தன்வசப்படுத்தியது. இறுதியில் பயஸ்-காரா பிளாக் ஜோடி 7-5, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது.

### சாதனை சமன்

இதன்மூலம் பயஸ்-காரா பிளாக் ஜோடி முதன்முறையாக அவுஸ்திரேலிய ஓபனில்



சம்பியன் பட்டம் வென்றது. அவுஸ்திரேலிய ஓபன் கலப்பு இரட்டையரில் பயஸ், இரண்டாவது முறையாக கோப்பை வென்றார். முன்னதாக கடந்த 2003இல் பயஸ் அமெரிக்காவின் மார்டினா நவரத்திலோவாவுடன் இணைந்து பட்டம் வென்றார்.

இது பயஸ் வென்ற, 11ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் (இரட்டையர்-6, கலப்பு இரட்டையர்-5) இதன் மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இந்தியர்கள் வரிசையில் சக வீரர் மகேஷ் பூபதியின் (இரட்டையர்-4, கலப்பு இரட்டையர்-7) சாதனையை சமன் செய்தார்.

## ஆஸி. ஓபன் டென்னிஸ்; ரோஜர் பெடரர் சம்பியன்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர்பெடரர், இங்கிலாந்தின் ஆண்டி முர்ரேவை வீழ்த்தி 16 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலிய ஓபன் கிரண்ஸ்லாம் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் நம்பர்-1 வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), இங்கிலாந்தின் ஆண்டி முர்ரேவை சந்தித்தார். விறுவிறுப்பான போட்டியில் முதலிரண்டு செட்டை பெடரர் 6-3, 6-4 என கைப்பற்றினார்.

### டை-பிரேக்கர்

மூன்றாவது செட்டில் ஆண்டி முர்ரே ஆதிக்கம் செலுத்தினார். இதில் 2-5 என பின்தங்கியிருந்த நிலையில் எழுச்சி கண்ட பெடரர், தொடர்ந்து மூன்று புள்ளிகள் பெற்று 5-5 என சமநிலை பெறச் செய்தார். பின்னர் இருவரும் தலா ஒரு புள்ளிகள் பெற ஆட்டம் 6-6 என டை-பிரேக்கர் சுற்றுக்கு சென்றது.

இதில் இருவரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் பெடரர் 13-11 என ஆட்டத்தை கைப்பற்றினார். இதையடுத்து பெடரர் மூன்றாவது செட்டை 7-6 என தன் வசப்படுத்தினார்.



இறுதியில் பெடரர் 6-3,6-4,7-6 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று இத் தொடரில் நான்காவது பட்டம் (2004,06,07,10) வென்றார்.

### 16ஆவது பட்டம்

அவுஸ்திரேலியன் ஓபனில் பட்டம் வென்ற பெடரர் கிரண்ட்ஸ்லாம் அரங்கின் ஒற்றையர் பிரிவில் தனது 16 ஆவது பட்டத்தை பெற்றார். இதன் மூலம் இவர் அதிக கிரண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர்கள் வரிசையில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார். இவர் இதுவரை அவுஸ்திரேலியன் ஓபன்-4 பிரெஞ்ச் ஓபன்-1 விம்பிள்டன்-6 யு.எஸ். ஓபன்-5 உள்ளிட்ட கிராண்ட்ஸ்லாம் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## செரினா வில்லியம்ஸ் சம்பியன் ஹெனின் போராடி தோல்வி

(மெல்போர்ன்)


அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸ் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார். ஆஸி. ஓபனில் அவர் 5ஆவது முறையாக பட்டம் வென்றுள்ளார்.

மெல்போர்னில் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் முன்னாள் நம்பர்-1 வீராங்கனை ஜஸ்டின் ஹெனினுடன் செரினா மோதினார்.

முதல் செட்டில் செரினா 6-4 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் அபாரமாக விளையாடிய ஹெனின் 6-3 என்ற கணக்கில் வெற்றிபெற 1:1 என சம நிலை ஏற்பட்டது.

மூன்றாவது செட்டில் தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய செரினா 6-4, 3-6, 6-2 என்ற கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

இப்போட்டி 2 மணி 7 நிமிட நேரம் நீடித்தது. ஆஸி. ஓபனில் 5ஆவது முறையாக வென்றுள்ள செரீனா, ஒற்றையர் பிரிவில்



இதுவரை 12 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்று பில்லி ஜீன் கிங்குடன் சமநிலையில் உள்ளார்.

ஓய்வுக்குப் பின்னர் மீண்டும் களமிறங்கிய முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியிலேயே இறுதிப்போட்டிவரை முன்னேறிய ஹெனின் ரசிகர்களின் பாராட்டுக்களை அள்ளினார்.

## மிதிவெடிகள் அகற்றப்பட்டதும்...

முயற்சிகளை முன்னெடுத்தோம்.

கடந்த 6 மாத காலத்திற்குள் நாங்கள் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை அவர்களது சொந்த இடங்களிலே மீள்குடியமர்த்தியிருக்கின்றோம்.

ஆனால் மிதிவெடி அகற்றும் பணியை நாங்கள் எதிர்பார்த்தது போல் நிறைவு செய்ய முடியவில்லை. அந்தப் பிரதேசங்களில் மிதிவெடிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த மக்களை நாங்கள் அந்த மிதிவெடிக்குள் குடியமர்த்தி அவர்களுக்கு உயிராபத்துக்களை ஏற்படுத்தக் கூடாது.

இந்த மிதிவெடியை அகற்றுகின்ற பணியில் இராணுவத்தினரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மிகத் துரிதகதியிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று நாங்கள் ஆயிரம் பேரை பூநகரிப் பிரதேசத்திற்கு மீள்குடியேற்றத்திற்காக அனுப்பியிருக்கின்றோம். அதேபோல் நெடுங்கேணிப் பிரதேசம் தற்போது மீள்குடியமர்த்தக் கூடிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தப் பகுதியிலும் அடுத்த அடுத்த சில தினங்களிலே மீள்குடியமர்த்தலுக்காக மக்களை அனுப்பவுள்ளோம். எனவே எவ்வாறு விரைவாக இந்த மக்களைக் குடியமர்த்த முடியுமோ அவ்வளவு விரைவாக குடியமர்த்துவோம்.

எங்களுக்கு இந்த மக்களை முகாம்களில் தொடர்ந்து வைக்க வேண்டிய எந்தவித நோக்கமோ தேவையோ தேவைப்பாடோ கிடையாது என்றார். (ச-3)

## இரு தசாப்தங்களின் பின்னர்...

கட்டமாக 150 பேருந்துகள் பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இந்த பாதையின் ஊடாக ஆயிரம் மக்கள் பயணித்துள்ளனர்.எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த பாதை காலை 8.00 மணியில் இருந்து மாலை 2.00 மணிவரையுமே திறக்கப்படும் என கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் ஜெயநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏ-32 பாதையினூடாக செல்லும் போது புத்தளத்திற்கும்-மன்னாருக்கும் இடையிலான தூரம் அனுராதபுரம்-மதவாச்சி பாதையை விட 100 கி.மீ குறைந்ததாகும்.எனினும் இரு தசாப்தங்களாக பயன்படுத்தப்படாததால் வீதி கடுமையாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## சமாதானத்...

அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகளில் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது சமூக மட்டக் குழுக்களுடன் கலந்துரையாடியே முடிவுகள் எடுக்கப்படவேண்டும் எனவும் இவர்கள் கோருகிறார்கள்.

இந்த குழுவில் பல்துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் இடம் பெற்றுள்ளார்கள். வடபகுதியில் இருக்கும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் பலர் இந்த குழுவில் இணைந்துள்ளனர்.

யாழ்மாவட்ட மீனவர் சங்கங்களின் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவர் தவரட்ணம் அவர்களின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு தமது செயற்பாட்டை விளக்கி அதன் தலைவர் சி.தவரட்ணம் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (ச-5)

## ஐ.தே.க., ஜே.வி.பி. இணைந்து...

எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் இப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசின், மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவுகள் குறித்தும் இப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் பாரிய மோசடிகள் இடம் பெற்றுள்ளன. இது நீதியானதாக, நியாயமானதாக நடைபெறவில்லை. இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் இப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மக்கள் தயாராகி வருவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகம் மரணித்து விட்டது.

அந்தளவுக்குத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறினார். (ச-5,9)

## அமெரிக்கத்...

விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதேவேளை சுவிட்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவருக்கும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்குமிடையிலான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் வெளிவிவகார அமைச்சின் கவுன்சிலர் காரியாலயம் ஒன்று வடமாகாணத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். இக் காரியாலயம் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுமெனவும் அவர் கூறினார்.வெளிநாடுகளுக்கு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாளாந்தம் 500பேர் கொழும்பு வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டே யாழ்ப்பாணத்தில் அமைச்சின் காரியாலயம் ஒன்றை நிறுவ முடிபு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (ச-9)

## கூட்டமைப்பு...

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொதுத் தேர்தல் தொடர்பான முடிபுகள் கனடாவில் உள்ள தமது சகோதரரின் இறுதிக் கிரியைகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் நடைபெறும் என சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்ட எம்.கே. சிவாஜிலிங்கம், அவருக்கு ஆதரவு தெரிவித்த சிறிகாந்தா ஆகிய இருவருமே இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முடியாது எனக் கூட்டமைப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-5,9)

## ஏப்ரல் ௭...

தேர்தல் தொடர்பில் அறிவிப்பை மேற்கொண்டதன் பின்னர் இந்தப்பணம் திட்டமிட்டபடி செலவிடப்படும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துடன் இந்த நாடாளுமன்றின் ஆட்சிக்காலம் நிறைவடைவதனால் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செயலகம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## காலக்கெடு நிறைவடைந்த...

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நேற்று 31 ஆம் திகதிக்கு முன்னர் மீள் குடியமர்த்தப்படுவார்கள் என உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் அரசாங்கம் சொல்லிக் கொண்டது.

சகல மக்களையும் அவர்களின் சொந்த இடத்தில் கொண்டு சென்று மீள்குடியமர்த்துவதாகத் தேர்தலுக்கு முன்பாகவே அரச அதிகாரிகள் அறிவித்தனர். அப்போது ஒரு பகுதி மக்களையும் மீள் குடியேற்றம் செய்தனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் வந்ததால் மீள்குடியேற்றம் முற்றுமுழுதாக எல்லாம் ஸ்தம்பித்துப் பாதிக்கப்பட்டு விட்டது. இதேவேளை தேர்தலும் முடிந்து விட்டது.எப்போது மீள்குடியேற்றம் என்றுதான் நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு நாளும் அல்லது இந்தக் கிழமை அல்லது அடுத்த கிழமை எங்களுக்கு ஒரு அறிவித்தல் வரும் என ஆவலோடு எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

ஏ-9 க்கு வடக்காக உள்ள எந்தவொரு இடத்திலும் மீள்குடியேற்றியதாக நாங்கள் அறியவும் இல்லை. நாங்கள் பார்க்கவும் இல்லை எனப் பொதுமக்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான இடைத் தங்கல் முகாம்களில் தற்போது 90 ஆயிரம் பேர் வரையும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களும் தங்களைத் தாமதமின்றி சொந்த இடங்களில் உரிய அடிப்படை வசதிகளுடன் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

இடைத் தங்கல் முகாம்களிலிருந்து வெளியேறியுள்ள கணிசமான தொகையினர் தமது உறவினர்,நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றார்கள் என்பதும் போரின் போது இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்ற சுமார் 3 இலட்சம் பேரில் மூன்றில் இரண்டு பங்கினரை அவர்களின் சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றத்திற்காக அனுப்பி வைத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-3,5,9)


CISCO-CCNA Network பயிற்சி
உயர்சம்பளத்துடனான IT வேலைவாய்ப்புக்களுக்கு
அனைவரும் பயிலலாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
மேலதிக விபரங்களுக்கு இன்றே
MCS 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம். 0772 395 895
Supported By UNDP/JRRP
(C-4369)





### நீங்காத 57ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 02 09 1987

விண்ணில் 08 12 2009



### அமரர் இந்திரகுமார் பங்கயற்செல்வி

இயற்கையின் நியதியிலே எமை எல்லாம் தவிக்க விட்டு
விதி விதித்த வலைதனிலே வீழ்ந்து விட்ட என் செல்வி
ஆற்றுவார் பலர் இருந்தும் ஆறவில்லை எம் மனங்கள்
அல்லல்கள் ஏதும் இன்றி ஆண்டவன் அடி சென்று
அமைதியாய் உறங்குகிறீர்
உம் உயிர் பிரிந்த வேதனை நினைவுகள்
என் உயிர் பிரியும் வரை என்றும் மாறாதம்மா

எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அணைந்த செய்தி அறிந்து உடன் வந்து உதவி செய்தவர்கட்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் செய்தி வழங்கியவர்கட்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் தந்தி மூலம் ஆறுதல் செய்திகளை அளித்தோருக்கும் மலர் மாலை, மலர் வளையம் என்பவற்றைத் தந்து உதவி புரிந்தவர்கட்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் செய்தி வழங்கியவர்கட்கும் உடனிருந்து பல வழிகளிலும் உதவிகளை செய்து தந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் அன்னாரது 57 ஆம் நாள் நினைவு நிகழ்வு நாளை (02.02.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந் நினைவு நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஒவ்வொருவரும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பு எதுவும் இல்லை)

'இந்திரச்செல்வி மகால்'
சிலம்புப்புளியடி வீதி,
சங்கானை.

அழைப்பு:- க.இந்திரகுமார் (கணவர்)
(கந்தசாமி அன் சன்ஸ்,
சங்கானை)

(548)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.